403

தமிழ் தந்த தேன்



CLS

0-, 6x
N60
56474

ம. இராமநாதன்

தமிழ் தந்த தேன்

ஆசிரியர்
வித்துவான் ம. இராமநாதன்
தலைமைத் தமிழாசிரியர்
தூய பேதுரு உயர்நிலைப் பள்ளி
தஞ்சாவூர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(*In association with the United Society for Christian Literature*)
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
and at
MYSORE BANGALORE TIRUVALLA

S.B.

© THE AUTHOR
First Printed, October 1960

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1960. B4627

முன்னுரை

இந்நூல் அரசியலார் 1958-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள புதிய பாடத்திட்டப்படி ஆறும் வகுப்பில் பயிலும் மாணவ மாணவிகளுக்குப் பயன்படும் முறையில் எளிய இனிய செந்தமிழ் நடையில் அமைத்ததொரு துணைப்பாட நூலாகும்.

இந்நூலைக் கற்கும் மாணவர்கள் அன்பு, அருள், வண்மை, ஊக்கம், நாட்டுப்பற்று முதலியன பெறுவர் எனின் அக்கூற்று மிகையாகாது.

தஞ்சாவூர்,
25-6-1960

ஆசிரியர்

பொருள் அடக்கம்

		பக்கம்
1.	முருகனும் முத்தையனும் ...	1
2.	என் கடன் பணி செய்து கிடப்பதே	4
3.	வணிகனும் தொழிலாளியும் ...	9
4.	வண்மை காத்த வேந்தன் ...	12
5.	தாமப்பல் கண்ணனார்	20
6.	உண்மையே உலகில் வெல்லும் ...	25
7.	ஜேம்ஸ் வாட்	34
8.	மங்கோ பார்க்கின் ஆப்பிரிக்கச் செலவு	37
9.	பரிதிமாற் கலைஞர்	44
10.	இராபர்ட் கால்டுவெல்	52
11.	வ. உ. சிதம்பரம் பிள்ளை ...	57
12.	அலெக்சாந்திரியாவும் கலங்கரை விளக்கும்	62

1. முருகனும் முத்தையனும்

ஓர் ஊரில் முருகன் முத்தையன் என்ற இருவர் இருந்தனர். இருவரும் உடன்பிறந்தவர்கள். முருகன் அண்ணன்; முத்தையன் தம்பி. முருகன் நற்குண நற்செயல்களில் மேம்பட்டு விளங்கினன். யாவருடனும் அன்பாகவும் பணிவுடனும் நடந்தான். 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்,' 'கீழோர் ஆயினும், தாழ உரை,' 'ஊருடன் கூடி வாழ்' முதலிய ஆன்றோர் மொழிகளைப் பின்பற்றி வாழ்ந்தான். முத்தையனே செருக்கு உடையவனாக இருந்தான். பெரியோர்களிடம் சிறிதும் பணிவுடையவனாகப் பழகமாட்டான்.

முருகனுக்கும் முத்தையனுக்கும் பெற்றோர்கள் இல்லை. அவர்கள் திடீரென்று எதிர்பாராத விதமாக இறந்தனர். ஆயினும் இவர்களுக்குத் தாத்தா இருந்தார். அவரே அளவிலா அன்புடன் அவ்விருவரையும் கவனித்து வளர்த்தார்.

அவர்கள் வாழ்ந்த ஊரில் உயர்நிலைப்பள்ளி இல்லை. ஆதலால் பாட்டனார் ஒரு பெரிய நகரத்தில் இருந்த உயர்நிலைப்பள்ளி யொன்றில் தமது பேரப்பிள்ளைகளைச் சேர்த்துப் படிக்கச் செய்தார். இருவரும் உணவும், உறைவிடமும் பள்ளிச் சார்பிலேயே பெற்றுக் கல்வி கற்றுக்கொண்டிருந்தார்கள்.

மூத்தையனுக்கு நாளடைவில் கல்வி கற்பதில் முழுமனமும் செல்லவில்லை. அவன் நான்காம் படிவத்தை முடிப்பதற்குள் வெளியே வேலைதேட நினைத்தான்; கல்வியில் கருத்தைச் செலுத்தாமல் ஊர் முழுவதும் சுற்றித் திரிந்தான். பள்ளிச் செலவுக்கென்று பாட்டனர் அனுப்பிய பணத்தை யெல்லாம் வீண் செலவு செய்தான். முருகனே மிகுந்த கருத்தோடும் முழுமுயற்சியோடும் கல்வியை நன்கு கற்றுக்கொண்டிருந்தான்.

முருகன் தேர்விற்காக மிகுந்த கவனத்துடன் படித்துக்கொண்டிருந்தான். 'பொறுக்குத் தேர்வில் எவ்வாருவது முதலாவதாகத் தேறவேண்டும். அவ்வாறு வெற்றி பெற்ருல் கல்லூரிப் படிப்புக்கு வேண்டிய உதவிப் பணமும் கிடைக்கும். தாத்தா வுக்கும் ஒவ்வொரு மாதமும் பெருந்தொகை செலவு ஏற்படாமல் செய்துவிடலாம்' என்று நினைத் தான்.

முருகன் இவ்வாறு எண்ணிக்கொண்டிருந்த போது தந்திச் சேவகன் வந்து அவன் கையிலே தந்தியைக் கொடுத்துச் சென்ருன். முருகன் மிகுந்த பரபரப்புடன் கவரை உடைத்துத் தந்தியைப் படித்துப் பார்த்தான்.

'பேரன் முருகனுக்குத் தாத்தா அனுப்பும் செய்தி. நான் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கி றேன். உடனே புறப்பட்டு வரவேண்டும்' என்று எழுதப்பட்டிருந்தது.

தந்தியைப் படித்தறிந்த முருகனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. முருகன் தாத்தாவை

உள்ளன்புடன் நேசித்ததால், அவன் உள்ளம் 'இப்பொழுது எப்படிப் புறப்பட்டுப் போகிறது. புறப்பட்டுச் சென்ருல் தேர்விற்குப் படிப்பது கெட்டுப் போகுமே' என்று எண்ணமிட்டான். 'நாம் உதவிப் பணம் பெறலாம் என்றெல்லாம் நினைத்தது வெறும் பகற்கனவாக முடியுமோ' என்று எண்ணி அஞ்சினன். தாத்தாவைப் பார்க்கப்போவதா? படிப்பைக் கவனிப்பதா? என்று ஒரு முடிவுக்கும் வர இயலாமல் அவன் மனம் ஊசல் ஆடியது.

பிறகு படிப்புப் போனலும் போகட்டும். தாத்தாவை உடனே போய்க் காண்பதுதான் முதற் கடமை என்ற முடிவுக்கு வந்தான். 'கடமை கடலிலும் பெரிது' என்ற சிறந்த முடிவைக் கொண்ட முருகன் உடனே புறப்பட்டு ஊரை அடைந்தான். தாத்தாவின் பக்கத்திலேயே இருந்து அவருக்குப் பணிவிடைகளை மிகமகிழ்ச்சியுடன் செய்தான்.

முருகனுக்கு அனுப்பியதைப்போல் முத்தையனுக்குத் தாத்தா தந்தி யனுப்பினர். முத்தையன் தந்தியை ஒரு பொருளாக மதிக்கவில்லை. 'தாத்தா செத்தால் சாகட்டும். பிழைத்தால் பிழைக்கட்டும். அந்தக் கவலை நமக்கு ஏன்?' என்று எண்ணிக் கொண்டு தன் காரியத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

முத்தையன் உடனே வராதது தாத்தாவுக்கு மிகுந்த சினத்தை உண்டாக்கியது. அதற்குமேல் முத்தையனின் செலவுக்குப் பணம் அனுப்புவதை நிறுத்திவிட்டார். 'என் உடைமைகளை எல்லாம்

முருகனே அடையவேண்டும். முத்தையனுக்குச் சிறிதும் அவ்வுடைமைகளில் தொடர்பு இல்லை' என்று உயிலும் எழுதி வைத்துவிட்டார்.

ஆதலால் மாணவர்களே! பெரியோர் வார்த்தைகளை மதித்து நன்றியுடையவர்களாய்ப் பழகி வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவீர்களாக.

2. என் கடன் பணிசெய்து கிடப்பதே

அன்பே வடிவாகத் திகழ்பவன் இறைவன். எல்லா உயிர்க் கூட்டங்களுக்கும் இன்னருள் புரிகின்றான். பேரின்ப வாழ்வை விரும்பும் மக்கள் இறைவனை வணங்குவதோடு எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டுதல் மிகமிக இன்றியமையாததாகும். பொதுமறையாகிய திருக்குறளும்

> 'அன்பிலார்எல்லாம் தமக்குரியவர்; அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு'

என்று அன்புடையாரின் சிறப்பைப் புகழும்.

'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என அறிஞரால் போற்றப்படும் தொண்டை நாட்டில் ஒரு சிற்றூரில் தனபாலன் குணசீலன் என நண்பர் இருவர் வாழ்ந்தனர். முன்னவன் தன் பெயருக்கேற்பச் செல்வச் சிறப்புடையவனாக விளங்கினான். நிலபுலங்களைப் பெற்றுப் பெரும் புகழ் எய்தியிருந்தனன். பின்னவன் செல்வச் சிறப்பின்றி இருப்பினும் நற்குண நற்செயல்கள் உடைய

வனுகவும், அருள் உள்ளம் படைத்தவனுகவும் இருந்தான்.

தைத்திங்கள் உழவர் உழுபயனை அடைந்தனர். தனபாலனும் தன் வயல்களில் நெற்பயிர்களை எல்லாம் அறுவடை செய்து பெரு மகிழ்ச்சியுற்ருன். ஆதலால் தனபாலனும் குணசீலனேடு தென்னுட்டிலுள்ள திருப்பதிகளுக்கெல்லாம் சென்று ஆங்காங்கு எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி வர எண்ணினுன். இருவரும் அதற்கான முன்னேற்பாடுகளை யெல்லாம் செய்தனர்.

தனபாலன் யாத்திரைக்கு வேண்டியன எல்லாம் எடுத்துக்கொண்டு கிளம்பினுன். ஆனுல் அவன் மனம் தன் குடும்பத்தின் மீதே இருந்தது. தான் யாத்திரை செல்லும் நாட்களில் மனைவி மக்கள் எவ்வாறு நடந்துகொள்வரோ என்ற ஐயம் அவன் மனத்தை மிகவும் வாட்டியது. குணசீலனே ஆங்காங்குள்ள பற்பல திருப்பதிகளின் சிறப்பையும் அங்கெல்லாம் தான் காணவிருக்கும் இயற்கையின் அழகையும் நினைத்து நினைத்து மகிழ்ச்சியோடு புறப்பட்டான். ஆனுல் அவனிடம் கைப்பொருள் ஓரளவாகவே இருந்தது. மிகுதியாக இல்லை.

தனபாலனும் குணசீலனும் தலயாத்திரை செல்லும்போது திருவண்ணுமலை, சிதம்பரம், சீர்காழி, பழனி முதலிய திருப்பதிகளில் வீற்றிருக்கும் கடவுளை வணங்கிச் சென்றனர். பின்பு அழகரையும், அரங்கநாதரையும் அன்போடு பணிந்

தனர். போகும் வழியில் குணசீலன் ஏழை எளியவர் களைக் காணும்போதெல்லாம் இன்சொற் கூறித் தன்னாலியன்ற உதவிகளைச் செய்தான்.

ஒருநாள் இரு நண்பரும் ஒரு சாலை வழியே சென்றுகொண்டிருக்கும்போது ஓர் இளைஞன் உடலில் பல இடங்களில் குத்துக் காயங்கள் ஏற் பட்டுத் தவித்துக்கொண்டிருந்தான். அவனைக் கண்டவுடனே அவன் கள்வர்களால் தாக்கப்பட்டுப் பொருளை இழந்தவன் என்பது தெளிவாகப் புலப்



குற்றுயிராகக்கிடந்த இளைஞனைத் தூக்கிச்செல்லுதல்

பட்டது. அவ்வமயம் தனபாலனின் நினைவெல் லாம் தன் பணப்பையின் மீதுதான் சென்றது. ஆனால் குணசீலனே குற்றுயிராகக் கிடந்த இளைஞ னிடம் அருளுடையவனாய் இரக்கங் காட்டினான்;

அவனுக்கு முதலுதவி செய்தான்; அவனைத் தன் முதுகின்மேல் தூக்கிச் சென்று அண்மையில் இருந்த மருத்துவச்சாலையில் இட்டு ஆறுதல் அளித்தான். அவன் உணவிற்காக வேண்டிய பொருளும் கொடுத்து உதவினன்.

மற்றொரு நாள் நண்பர் இருவரும் ஒரு சிறு சிற்றூரை அடைந்தனர். அங்குள்ள மக்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாமல் பஞ்சத்தால் வாடி வருந்தினர். தனபாலனும் குணசீலனும் தமக்கு வேண்டிய உணவை மிகுந்த விலை கொடுத்தே பெற்றனர். அச்சிற்றூரில் அவர்கள் ஒரு குடிசையில் இளைப்பாறினர். அக்குடிசையில் அவர்கள் கண்ட கோரக் காட்சி யாது தெரியுமா? ஒரு முதியவள் மெலிந்த உடலும், தளர்ந்த நடையும், உட்குழிந்த விழிகளும், காய்ந்த உதடும் உடையவளாய்த் தோற்றமளித்ததை ஒரு பக்கத்தில் பார்த்தனர். மற்றொரு பக்கம் அவள் மகன் வாடிய முகமும், வடிகின்ற கண்ணீரும், நீடிய பசியும், மயக்கமான தோற்றமும் உடையவனாய் இருந்ததையும் கண்டனர். தனபாலன் ஒரு கணமும் அங்கிருக்க விரும்பாது வெளியே சென்றான். குணசீலனோ நண்பனுடன் செல்லாது, தான் பிறகு சந்திப்பதாகக்கூறி அச்சிறு குடிசையிலேயே தங்கினன். பின்னர் குணசீலன் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று எண்ணித் தன்னிடம் இருந்த உணவைக் கிழவிக்கும் மகனுக்கும் கொடுத்து, நீர் உண்ணுமாறு செய்து அவர்களின் பசிப் பிணியைப் போக்கினன். உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் அல்லவோ? ஆதலின்

உணவுண்ட தாயும் சேயும் உணர்வு பெற்றெழுந் தனர். குணசீலன் அவர்களுக்கு இன்சொற்கூறி மனம் மகிழுமாறு செய்து, தன்னிடம் உள்ள பொருளின் ஒரு பகுதியை அவர்களிடம் கொடுத்து அவ்விருவரும் பிழைக்க வழி செய்தான். ஆதலால் குணசீலன் மேற்கொண்டு தென்குமரி, இராமேசு வரம் முதலிய திருப்பதிகளைக் காண முடிய வில்லை; தன் யாத்திரையை அத்துடன் முடித்துக் கொண்டு தன் ஊர் திரும்பினான்.

முன் சென்ற தனபாலன் இராமேசுவரம் கோயிலை அடைந்து இறைவனை வணங்கினான். கூட்டத்தின் இடையே இருந்த அவனுக்கு நினை வெல்லாம் தன் சட்டைப் பையிலுள்ள பணப் பையின் மேலேயே இருந்தது. ஆதலால் இறைவனை நெருங்கி வணங்க முடியவில்லை. பக்கத்தில் நின்ற ஒருவன் மீது ஐயமுற்று அவனையே பார்த்துக் கொண்டிருந்ததால் கடவுளைக் காண்பதை முற்றிலும் மறந்தான்.

தனபாலனின் நண்பன் குணசீலன் இறைவன் திருவடிகளின் பக்கத்தில் இருந்ததாகத் தோன்றி யது. குணசீலன் அங்குச் செல்லவே இல்லை. ஆனால் தனபாலன் கண்ட காட்சியின் உட்கருத்து என்ன?

மாணவர்களே! ஏழை எளியவர்களின் துன் பத்தைச் சிறிதும் எண்ணாது பொருளிலேயே நோக்கமாக இருந்த தனபாலன் இறைவனுக்கு அருகே செல்ல இயலாதவன் ஆனான். ஏழை எளியோர்களிடம் அன்பு காட்டி உண்டியும்

பொருளும் கொடுத்து உதவிய குணசீலன் இறைவனை எளிதில் கண்டான். ஆதலாலேயே, சான்றோர்களும் 'அன்பே கடவுள்' என்று அறிவுறுத்தினர்.

3. வணிகனும் தொழிலாளியும்

ஓர் ஊரில் ஒரு தொழிலாளி இருந்தான். அவன் நாள்தோறும் காலையில் இருந்து மாலை வரையில் உழைத்துப் பாடுபடும் இயல்புடையவனாக இருந்தான். அவ்வாறிருப்பினும், அவன் மனநிறைவும் மகிழ்ச்சியும் உடையவனாகவும், எப்பொழுதும் ஆடிப்பாடிக் காலங் கழிப்பவனாயும் வாழ்க்கைப் படகைச் செலுத்தி வந்தான்.

இத்தொழிலாளி வீட்டின் பக்கத்தில் பெருஞ் செல்வம் படைத்த வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் இரவும் பகலும் பணம் தேட வேண்டும் என்னும் ஏக்கமுடையவனாகவும், கவலையுடையவனாகவும், மன அமைதி அற்றவனாகவும் இருந்தான். ஒருநாள் வணிகனும் தொழிலாளியும் ஒருவரை ஒருவர் கண்டு அளவளாவும்படி நேரிட்டது. அவ்வமயம் வணிகன் தொழிலாளியைப் பார்த்து, 'நண்ப! நீ உனது தொழில் திறத்தினால் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பொருள் தேடுகிறாய்?' என்று வினவினன்.

அதற்குத் தொழிலாளி சிரித்து 'ஐயா! ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பொருள் வருவாய் என்றா கேட்கிறீர்கள்? அத்தகைய கணக்கு எனக்குத்

தெரியாது. அன்று அன்று உடலால் உழைத்துத் தேடி உணவு உண்டு வருகிறேன். ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பொருள் வருவாய் கிடைக்கிறது என்று கணக்குப் பார்க்கும் வழக்கம் என்னிடம் இல்லை' என்று கூறினான்.

இதனைக் கேட்ட வணிகன் 'அது போகட்டும். நாள் ஒன்றுக்கு எவ்வளவு பொருள் வருவாய் கிடைக்கும்? அதையாவது கூறு' என்றான். தொழிலாளி 'ஒரே மாதிரியாக ஒவ்வொரு நாளும் பொருள் வருவாய் வரும் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது, ஒரு நாளைக்கு ஒருநாள் ஏற்றத் தாழ்வாகவே இருக்கும்' என்றான்.

பிறகு வணிகன் தொழிலாளியை இரக்கமும் அன்பும் மிகப் பார்த்து 'நண்ப! நல்லது. இனி எதிர்காலத்தில் குறைவு சிறிதும் இன்றி வாழ நான் உனக்கு நூறு பொற்காசுகள் தருகிறேன். நீ அவைகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு வேண்டும் போது பயன்படுத்துக' என்று சொல்லி நூறு பொற்காசுகளைத் தந்தான்.

தொழிலாளி ஒரே சமயத்தில் அந்த நூறு பொற்காசுகளைப் பார்த்ததும், தான் இந்த உலகத்தில் உள்ள பொருள் முழுவதையும் அடைந்தது போலப் பேருவகை அடைந்தான். அவன் அதனைக் கொண்டுபோய் தன் குடிசையின் ஒரு மூலையிலே மிகப் பாதுகாப்புடன் புதைத்து வைத்தான். அவன் அப்பொருளைக் குழிதோண்டிப் புதைக்கும்பொழுது தன் மன அமைதியையும், உவகையையும், மனநிறைவையும், மேலும் தன்

வாழ்க்கைக்குத் தேவையான பரந்த மனநலத்தை யும் கூடவே சேர்த்துப் புதைத்துவிட்டான்.

அப்பொருளை அவன் பெற்றது முதல் அவனது மனமகிழ்ச்சி, மன நிறைவு முதலியவைகள் போன விடம் தெரியவில்லை. தூக்கமே வரவில்லை, தீராத கவலை, ஐயம், வீணான பயம் முதலியவை அவன்

தொழிலாளி நூறு பொற்காசுகளைப் பெறுதல்

மனதைப் பற்றித் துன்புறுத்திக்கொண்டேயிருந் தன. அவன் வீட்டில் இருந்தபொழுதெல்லாம் பொன் புதைக்கப்பட்ட இடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

இரவில் உறங்கிக்கொண்டிருக்கும்போது எலி, பூனை முதலியவைகளால் சிறிது சந்தடியுண்டாளு

லும், கள்ளர்கள் தனது பொருளைக் கொள்ளையடிப் பதற்கு வந்ததாக நினைப்பான். இவ்வாறு தொழிலாளி அப்பொருளினால் பல நாள் மிகவும் மனக் கலக்கத்தை அடைந்தான்; அவனது மனமும் சலித்துப்போய் விட்டது. தனது முன் நிலைமை பின் நிலைமை இரண்டையும் ஆய்ந்து பார்த்தான். தன்னிடம் பொருள் வந்தவுடனேயே தனது மன அமைதி நீங்கிப்போயிற்று என்பதை அறிந்தான். உடனே தன் பக்கத்து வீட்டுக்காரனிடம் ஓடிப் போய், 'ஐயா! பொற்காசுகளால் பெற்ற இன்பம் போதும்! உமது பொருளை நீங்களே எடுத்துக் கொள்க. அது எனக்குத் தேவையில்லை' என்று சொல்லிச் செல்வர் கொடுத்த நூறு பொன்னையும் கொடுத்தான்.

மாணவர்களே! தொழிலாளி செல்வமில்லாத போது மன நிறைவுடன் இருந்தான்; அதனை அடைந்தபோது மன நிறைவின்றிக் கலங்கினான். ஆகவே ஒவ்வொருவரும் கிடைத்ததைக்கொண்டு மன நிறைவு அடையவேண்டும்; ஆசைக்குச் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது.

'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே'.

4. வண்மை காத்த வேந்தன்

மக்களாகப் பிறந்தோர் புகழ் உண்டாவதற்குக் காரணமான சிறந்த செயல்களையே செய்தல்வேண்டும். அதனையே வள்ளுவர் 'தோன்றிற் புகழொடு

தோன்றுக' என்ற தொடரால் விளக்குவர். புகழ் உண்டாவதற்குக் காரணமான சிறந்த செயல்கள் யாவை? கல்வி, வீரம், கொடை என்ற இவைகளால் புகழ் பெறலாம். அவற்றுள் கொடையினால் வரும் புகழே யாவராலும் புகழப்படுவது. அதனைச் செய்பவரே வள்ளல்கள். அவர்கள் தம்மிடம் வரு வோர் எதைக் கேட்டாலும் இல்லை என்று கூறாமல் வரையாது வழங்குவர். ஆகவே இவ்வுலகில் நிலைபெறக் கருதியோர் தமது புகழை நிலைநாட்டி மாய்ந்தனர். அத்தகைய வள்ளல்களுள் ஒருவனது கொடைச் சிறப்பைச் சிறிது அறிவோம்.

குமணன் என்னும் அரசன் முதிரமலைக்கும், அதையடுத்த நாட்டிற்கும் தலைவன். அவன் நற் குணங்கள் நிறைந்தவன்; இன்சொல் கூறும் தன்மையுடையவன். புலவரைப் போற்றி வரை யாது வழங்கும் வண்மையுடையோன். 'செல்வத் துப் பயனே ஈதல்!' என்ற நக்கீரர் வாக்கிற்கிணங்க அவன் தான் பெற்ற பொருளை யாவர்க்கும் வழங்கி வள்ளலாய் வாழ்ந்தான்.

அவன் தம்பியின் பெயர் இளங்குமணன். அவன் பண்பு சிறிதும் இல்லாதவன்; பொறாமை மிக்க உள்ளத்தினன். தமையனது கொள்கையைச் சிறிதும் ஒப்புக்கொள்ளாதவன். ஆதலால் அவன் குமணன் செயலை அடியோடு வெறுத்தான்.

குமணனின் வண்மையை அறிந்து புலவர் வறிஞர் முதலியோர் பலரும் அவனிடம் சென்று பரிசில் பெற்றனர். இவ்வாறு ஈகைத்தொழில் செய்து இசைபட வாழ்ந்த காலத்தில் இளங்

குமணன் எவ்வாருவது தன் அண்ணனை ஒழித்து விடவேண்டும் என்று எண்ணி அதற்காகப் பல வகையிலும் முயற்சி செய்தான்.

தம்பியின் அழுக்காற்றையும் சூழ்ச்சியையும் குமணன் அறிந்து உலக வாழ்க்கையை வெறுத்தான். 'என் தம்பியே இந்நாட்டை ஆளட்டும் நான் காட்டை அடைந்து, காய்கனி உண்டு, கடவுளைத் தொழுது, இனிமையாக அமைதியுடன் காலம் கழிப்பேன்' என்று நினைத்தான். இருப்பினும் புலவர்களையும், ஏழை எளியோரையும் எண்ணி வருந்தினுன்; கவன்ருன்; பிறகு தேறுதல் அடைந்து காட்டை அடைந்து ஒருவரும் அறியாத இடத்தில் மறைவாக வசித்து வந்தான்.

குமணன் காடு அடைந்த செய்தி நாடெங்கும் பரவியது; நகர மக்கள் அளவிலாத் துன்பத்தில் மூழ்கினர். இனியாது செய்வோம் என்று ஏங்கினர். இளங்குமணன் எல்லையிலா மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தான்; அரசு கட்டிலில் அமர்ந்தான். ஆனுல் அது சிங்கம் அமர்ந்த இடத்தில் நாய் அமர்ந்ததுபோல் இருந்தது.

இளங்குமணன் தான் அரசாளத் தொடங்கியதும் மக்களுக்குக் மிக்க துன்பம் தரும் செயல்களைச் செய்தான். குமணனுல் நடத்தப்பட்டு வந்த அறங்களை யெல்லாம் நிறுத்தினுன். ஏழைகளுக்கு உணவிடும் பழக்கமும் அன்று முதல் நிறுத்தப்பட்டது. அவன் தன்னைக் காணவரும் சான்ருேர்கள், ஏழைகள் பொதுமக்கள் முதலியோரை இழிவான சொற்களால் இகழ்ந்து விரட்டினுன். ஆதலால் அவ்வூர்

மக்கள் அவனை வெறுத்தனர். இழிவாகக் கருதினர். குமணனைப் பாராட்டி வாயார வாழ்த்தினர்.

குடிமக்கள் தன்னை இழிவாகப் பேசும் சொற்களைச் செவியுற்றான்; அடங்காச் சினம் கொண்டான். குமணனைப் பற்றிப்பேசும் புகழுரை மனத்தில் பொறாமையை உண்டாக்கிற்று. ஆதலால் தன் தமையன் உயிருடன் வாழ்ந்தால் தனக்குத் துன்பம் விளையும் என்று எண்ணித் தன் தமையன் தலையைக் கொணர்பவருக்கு ஒரு கோடி பொன் அளிப்பதாகப் பறை சாற்றினான்.

அக்காலத்தில் பெருந்தலைச் சாத்தனார் என்றொரு தமிழ்ப் புலவர் இருந்தார். அவர் ஐயந்திரிபறக் கற்றவர். ஆராய்ச்சி அறிவு உடையவர்; பாட்டு இயற்றும் வன்மையுடையவர்; கல்விச் செல்வம் மிகுதியாக இருப்பினும் பொருட் செல்வம் இல்லாதவர்; மிக வறியவர். சாத்தனார் வள்ளல்களிடம் சென்று நல்லோர்களைப் பாவால் பாடிப் பரிசில் பெற்று வந்து குடும்பம் நடத்துவார். இத்தகைய புலவர் ஒரு நாள் குமணனின் கொடைச் சிறப்பைக் கேள்வியுற்றார். வறுமையின் ஆணையால் முதிரமலையை ஆளும் குமணனைக் காணப் புறப்பட்டார். வழியில் உண்டான பல வகையான துன்பங்களையும் சிறிதும் மதியாமல் வள்ளலின் ஊரை அடைந்தார். வந்தவுடன் குமணன் காடு சென்றதையும், அவன் தம்பி இளங்குமணனின் கொடுமையையும், தன் வறுமையையும், தான் வழிநடந்த களைப்பையும் எண்ணி எண்ணி ஏங்கினார். எனினும் அவனைக் காணாது செல்வதற்கு அவர் மனம் இசையவில்லை. கொடுத்

துக் கெட்ட குமண வள்ளலைக் கண்டு மகிழலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

புலவர் சாத்தனர் அருகிலுள்ள காட்டை அடைந்தார். அங்கு எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டு குடிசையில் வாழ்ந்து, மண் தரையில் வீற்றிருக்கும் குமணனைக் கண்டார். கண்டவுடன் புலவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று. ஒரு கவி இயற்றினர். அதன் கருத்து பின்வருமாறு:

'வரையாது வழங்கும் குமண வள்ளலே! எனது வீட்டில் சோறு சமைத்துப் பலநாட்கள் ஆகிவிட்டன. ஆதலால் அடுப்பிலே காளான் பூத்திருக்கிறது. என் மனைவி உணவு உண்டு பலநாட்கள் ஆயின. அவள் மிக மெலிந்து காணப்படுகிருள். என் மனைவியிடம் தாய்ப்பால் இல்லை. ஆதலால் குழந்தை பசி நீங்காமல் அவளது முகம் பார்த்து அழுகிறது. அவள் கலங்கிய கண்களுடன் என்னைப் பார்த்துக் கலங்கினள். நான் அக்காட்சியைக் காண இயலாமல் உன்னைக் காண வந்தேன். நீயோ துன்பத்தில் ஆழ்ந்துள்ளாய். இருந்தாலும் நீ புலவரது வறுமையை நீக்கும் வண்மையுடைய குடியில் தோன்றியவன். ஆதலால் நீ என்னை ஒன்றும் பெருத வெறுங்கையனய் அனுப்பாய் என்று எண்ணுகிறேன்.'

குமணன் அப்பாட்டின் கருத்தை நினைத்து மனம் வருந்தினன்; புலவர்க்குக் கொடுக்கச் சிறிதும் பொருள் இல்லையே என்று மனம் மாழ்கினன். எனினும் புலவரை வெறுங்கையுடன் அனுப்ப அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. பிறகு

புலவரை நோக்கி, 'அந்தோ! அந்த நாள் வந்திலே அருந்தமிழ்ப் புலவோய். இந்த நாள் வந்து நீ வருந்தி அடைந்தாய். யாது செய்வேன்' என்று சொன்னான். அச்சொற்களைக் கேட்ட புலவர் சிறிதும் சோர்வு அடையாமல் 'ஆற்று வெள்ளம் நீங்கி அடிகளைச் சுடும் அந்த நாளிலும் அது ஊற்று நீரால் உலகினரை உண்பிக்கும். அதுபோல எனது வறுமைப் பிணியைத் தீர்ப்பது மிக எளிமையாகும்' என்று நவின்றார்.

குமணன் புலவரிடம் தன் உடைவாளை அளித்தல்

உடனே குமணனுக்குத் தம்பியின் அறிக்கை நினைவுக்கு வந்தது. அவன் புலவரைப் பார்த்து அவர்தம் கையில் உடைவாளைக் கொடுத்து 'புலவரே! என் தம்பி இளங்குமணன் என் தலையைக் கொண்டுவருபவர் யாராயிருப்பினும் அவருக்குக்

கோடிப் பொன் தருவதாகப் பறையறைவித்துள்ளான். என் தலையை அந்த உடைவாளால் வெட்டி எடுத்துச் சென்று என் தம்பியிடம் தருக. அவன் உடனே உங்களிடம் கோடி பொன் தருவான் அதனைக் கொண்டு உமது வறுமையை அறவே போக்கிக் கொள்ளலாம்' என்று கூறினான்.

புலவர் இச்சொற்களைக் கேட்டு எல்லையற்ற வியப்பில் மூழ்கியதோடு 'கொடிது! கொடிது!' என்று கூவினார். 'இத்தகைய அருள் உள்ளம் படைத்த வள்ளலுடன் இழிகுணம் உடைய இளங் குமணன் எவ்வாறு பிறந்தான்' என்று எண்ணினார், பின்பு குமண வள்ளலை மீண்டும் செல்வ வாழ்வு பெறுமாறு செய்தல் வேண்டும் என்று உறுதி கொண்டார். விரைந்து இளங்குமணனிடம் வந்தார். வந்தவர் அவனிடம் பொருந்திய இழிகுணம் நீங்கும்படி ஒரு தமிழ்ப் பாடலைப் பாடினார். அப் பாடலின் கருத்து பின்வருமாறு.

'இளங்குமண, நமது உடல் நீரில் குமிழிபோல் விரைவில் அழியக்கூடியது. இவ்வுடல் அழிந்த பிறகு வீடு, வாசல், மாடு, கன்று முதலியவைகளால் யாது பயன் ஏற்படப்போகிறது. நாம் இம்மையில் தேடிக்கொள்ளும் நல்ல பெயரும் கெட்ட பெயருமே நிலைந்து நிற்பன ஆகும். இதனை நீ தெரிந்து கொள்ளாது உன் அண்ணன்மேல் பொறாமையும் கோபமும் கொண்டு அவனைக் காட்டுக்கு விரட்டியது நேர்மையல்ல. இதனால் நீ அடைந்த கெட்ட பெயர் எத்தகையது என்று சிந்தித்துப் பார். காட்டில் வாழும் உன் அண்ணன் குணம் இப்பொழுதும்

எவ்வாறு உள்ளது என்பதை எண்ணிப்பார். வறுமையில் மூழ்கிய நான் அவனிடம் சென்று ஒரு தமிழ்ப்பாடல் பாடினேன். அவன் தனது தலையை வெட்டிக் கொண்டுபோய் உன்னிடம் கொடுத்தால் ஆயிரம் பொன் கிடைக்கும் என்றும் அதைக்கொண்டு வறுமையை நீக்கிக் கொள்ள லாம் என்றும் தனது உடைவாளை என்னிடம் கொடுத்தான். இதோ அவ்வாள். இதில் அவன் பெயரும் உள்ளது. குடும்பத் தொல்லையால் மகிழ்ச்சி என்பதையே சிறிதும் அறியாத நான் உன் தமையனின் அறிவுத் திறன், உயர் குணம் என்ற இவைகளைக் கண்டு மகிழ்கின்றேன். உன் அண் ணன் முகமே எனது கவலைகளை ஒழித்தன.'

மேற்கண்ட பாட்டின் கருத்து இளங்குமண னின் மனதை உருக்கியது; முகத்தில் வருத்தக்குறி தோன்றியது. அண்ணனின் நல்லியல்புகள் யாவும் அவன் உள்ளத்தின் முன் தோன்றின. உடனே புலவரை அழைத்துக்கொண்டு சென்று காட்டில் அண்ணன் வசிக்கும் இடத்தை அடைந்தான். அவன் நிலையைப் பார்த்தான்; திருவடிகளில் வீழ்ந்து வணங்கி மன்னிக்குமாறு வேண்டினுன். வள்ளல் சிறிது தயங்குவது கண்ட புலவர் குமணனை வீட்டிற்கு வரவேண்டும் என்று வற்புறுத்தினர். குமணன் இருவர் கருத்திற்கும் இணங்கி தன்னூரை வந்து அடைந்தான். பின்னர் இருவரும் மனம் கலந்த நண்பராகி அன்பால் கலந்து வாழ்ந்தனர். குமணனும் பட்டம் பெற்று நாட்டை மீண்டும் அரசாளத் தொடங்கினன். தம்பியை இளவரசன்

ஆக்கினுன்; பெருந்தலைச் சாத்தனுருக்கு நிறையப் பரிசில்கள் வழங்கினுன். அப்புலவர் தமது ஊரை அடைந்து மனைவி, மக்களுடனும், சுற்றத் துடனும் இனிது வாழ்ந்தார். குமணனும் முன் போலவே புலவரைப் போற்றித் தலைக்கொடை யாளி என்று புகழ்பெற்ருன்.

மாணவர்களே! தனக்கே பெருந்துன்பம் வரும் காலமாய் இருப்பினும் மேற்கொண்ட அறத்தைக் கைவிடாமல் செய்யவேண்டும் என்பதை உணர்ந்து அவ்வழியில் நிற்க முயல்வீராக.

5. தாமப்பல் கண்ணனுர்

தொண்டை நாட்டில் புகழ்மிக்க சிறந்த ஊர்கள் பல உள. அவைகளுள் காஞ்சிபுரம் மிகச் சிறந்தது. பழங்காலத்தில் அவ்வூர் தலைநகரமாகவும் விளங்கி வந்தது.

காஞ்சிபுரத்தின் பக்கத்தில் புலமை மிக்க புலவர்களைத் தோற்றுவித்த பல ஊர்கள் விளங்கின. அவைகளுள் தாமப்பல் என்பது ஒன்று. அவ்வூர் 'தாமல்' என்றும் அழைக்கப்படும். அவ்வூரில் அறிவுடைப் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் கண்ணனுர். தாமப்பல் என்ற அவர் ஊருடன் அவர் பெயரையும் சேர்த்துத் 'தாமப்பல் கண்ணனுர்' என்று அவரை எல்லோரும் அழைத் தனர்.

தாமப்பல் கண்ணனுர் கல்வியில் கரை கண்ட வர். கேள்வியறிவிற் சிறந்தவர். தமிழ் இலக்கண

இலக்கியங்களை எல்லாம் நன்கு படித்துப் பயின்றவர். பணிவும் அடக்கமும் உடையவர். பிற உயிர்கள் பெறும் துன்பத்தைத் தமக்கு வந்ததாக எண்ணித் துடிக்கும் நெஞ்சம் பெற்றவர். முடியுடை மன்னனுயினும் குற்றம் செய்யின் அஞ்சாது இடித்து அறிவுரை கூறும் ஆண்மையும் அஞ்சா நெஞ்சமும் பெற்றவர். இவரது அறிவின் ஆழமும் நல்ல இயல்புகளும் நாடெங்கும் பரவின.

அக்காலத்தில் சோழ நாட்டை வீரம், கொடை, தமிழறிவு இவற்றில் சிறந்து விளங்கும் சோழன் நலங்கிள்ளி என்பான் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்துகொண்டு ஆண்டு வந்தான். இவன் கவிபாடும் ஆற்றல் மிக்க பைந்தமிழ்ப் புலவன். பாண்டிய நாட்டு அரசனோடு பகைத்துப் போரிட்டு, அவனை வென்று அடக்கியவன்.

இவனுக்குப்பின் பிறந்தவனே மாவளத்தான் என்பான். மாவளத்தானும் தன் தமையனைப் போலவே வலிமை நிறைந்தவன். கவிபாடும் ஆற்றலுடைய நலங்கிள்ளி போர்க் களத்தையே விரும்பினுன். மாவளத்தானே 'கல்வியே கருந்தனம்' எனக்கொண்டு அதில் கருத்தைச் செலுத்தினுன். மேன்மேலும் அறிவைப் பெருக்குவதில் முயன்ருன். ஆதலால் அவன் தன் நேரத்தின் பெரும் பகுதியைத் தமிழ் கற்பதிலேயே செலவிட்டான். தமிழ் அறிஞருடன் உரையாடுவதை ஓர் உயர்வாக எண்ணினுன். 'தமிழ் அமுது தன்னை உண்டவரை வாழவைக்கும்' என்ற ஆன்ருேர் வாக்கிற்கிணங்க, தன்னோடு இருந்து தனக்குத் தமிழ்த் தேனை ஊட்டவல்ல தமிழறிஞரைத் தேடினுன்.

ஒரு நாள் கண்ணனார் நலங்கிள்ளியைக் காண வந்தார். அப்புலவரை மாவளத்தான் முழு மனதுடன் வரவேற்று நெடு நேரம் அளவளாவிக் கொண்டிருந்தான். அவருடைய சீரிய புலமையும், சொல்வன்மையும், உயர்குணங்களும் அவன் உள்ளத்தைப் பிணித்தன, ஆதலால் அவரைத் தன்னுடன் வைத்துக்கொள்ளவும், அவரைத் தன் ஆசிரியராக ஏற்று அவரிடம் தமிழ்ப்பாடங் கேட்கவும் உறுதி செய்தான்; அப்புலவர் பெருமானுக்குத் தன் கருத்தைத் தெரிவித்தான். புலவரும் அதனை அன்போடு ஏற்றுத் தன் குடும்பத்துடன் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தார். புலவரும் புரவலரும் மனம் ஒன்றிப் பழகலுற்றனர்.

பொழுது புலர ஐந்து நாழிகை இருக்கும் போதே மாவளத்தானும் புலவரும் கண் விழித்தெழுந்து, காலைக் கடன்களை முடித்து நூல்கற்றற்கு இடமாகிய தமிழ் மன்றத்தை அடைவர். அங்கு அழகுடன் திகழும் நூல் நிலையத்தில் அறிவைப் பெருக்கும் நூல்கள் பல மிகுந்து விளங்கிற்று. புலவர் கண்ணனார், பல சுவடிகளிலிருந்து பல சிறந்த கருத்துக்களைக் கூறுவர்; அரசன் ஆர்வத்துடன் கேட்டு அறிந்துகொள்வான். புதுமையான செய்திகளைக் கேட்டு அறியுந்தோறும் 'இவைகளை முன் அறியாது வீண் காலம் கழித்தேனே' என எண்ணுவான். கேட்டவற்றைப் பலமுறை எண்ணிப் புலப்படும் ஐயங்களைப் புலவரிடம் பணிவுடன் கேட்டு அறிந்துகொள்வான். செல்வர் முன் ஏழைகள் ஏங்கி நிற்பதுபோல நின்று பல கருத்துக்களை எதிர்பார்த்து நிற்பான். அவர் அன்

போடு பல கருத்துக்களைக் கூறுவார். இவ்வாறு நாட்செல்லச் செல்ல மாவளத்தான் சிறந்த தமிழ் அறிஞனானான். இருவரும் நண்பராகவே பழகத் தொடங்கினர்.

பொழுதுபோக்கிற்காகச் சில நாட்களில் அரசனும் புலவரும் 'வட்டு' என்ற ஆட்டம் ஆடுவது உண்டு. ஒரு நாள் இருவரும் தமிழ்த்தேனைப் பருகிய பின்னர் வட்டாட விரும்பினர். பணியாளர், அறையில் நன்கு கீறப்பட்ட பொற்பலகையையும், மணிகள் பதித்த காய்களையும் கொண்டுவந்து வைத்தனர். இருவரும் எதிர் எதிர் அமர்ந்து ஆடலுற்றனர். வெற்றியும் தோல்வியும் ஒருவருக்கே எக்காலத்தும் இருத்தல் இல்லை. ஒருமுறை வெற்றியடைபவர், மறுமுறை தோல்வியும் அடைவர். இது சூதாட்டத்தின் இயல்பு. சில நேரம் வரை இருவரும் சமமாக ஆடினர். ஆட ஆட வெற்றி மன்னனுக்கே உரியதாயிற்று. புலவரே தோல்வியுற்றார் என்று உறுதியுடன் கூறும் நிலைமை உண்டாயிற்று. ஆதலால் புலவர் விளையாட்டாக ஒரு சூழ்ச்சி செய்தார். ஆட்டத்திற்குரிய காய் ஒன்றை மறைத்தார். ஆட்டத்திலேயே கண்ணையும் கருத்தையும் செலுத்தி வந்த மன்னன் அச்செயலைப் பாராது இருப்பானோ? மிக்க சினம் பொங்கியது; தன் பொறுமைத் தன்மையை மறந்தான். தன் கையிலிருந்த வட்டினை எடுத்து விரைவாகப் புலவர்மேல் எறிந்தான்.

வட்டு புலவரை வன்மையாகத் தாக்கியது. புலவருக்கு எல்லையற்ற சினத்தை உண்டாக்கியது. ஆத்திரமும் பொங்கியது. 'ஆத்திரக்காரனுக்குப்

புத்திமட்டு' என்ற முதுமொழிக்கு ஏற்ப, 'என்ன பேசுகிறோம்? யாரிடம் கூறுகிறோம்' என்பதைப் புலவர் மறந்தார்.

'சோழ அரசனே! மாவளத்தானே! நினது குலச்சிறப்பை மறந்தாய் போலும்! வலியப்பருந் துக்கு அஞ்சிய புறவின் துன்பத்தைப் போக்கிய சிபி என்னும் அரசன் தலைமுறையில் வந்த சான் றோனே! பகைவர் ஆற்றலைக் கெடுக்கும் வீரம் மிக்க நலங்கிள்ளியின் தம்பியே! வில்லாற்றலுடைய வீரர்களுக்குத் தலைவனே! வள்ளலே! நீ சினம் கொள்ளல் ஆகாது. உன்னிடம் சினத்தை நான் காண்பதால் உன் பிறப்பில் எனக்கு ஐயம் உண்டா கின்றது, என்று புலவர் மொழிந்தார்.

சான்றோர் எவர் பிழை செய்யினும் அவரை நன்றாகக் கண்டித்து நல்லுரையும் வழங்குவர். அவர் தம் உயிர் அழியினும் சிறிதும் அஞ்சாது நன்மை தரும் சொற்களையே கூறுவர். மேற்கூறிய சொற்களால் அரசனுக்கு உண்மையறிவு வரச் செய்வதையே கடமையாகக் கருதி இடித்துக் கூறி னார். மன்னன் சினம் உடனே மறைந்தது; அறிவு தெளிவடைந்தது; நிகழ்ந்ததை எண்ணினான்; 'தமிழ்ப் புலவரின் சிறப்பை நினையாது வட்டுக் கொண்டு எறிந்தேனே! என்னே என் மடமை!' என்று பலவாறு நினைத்து மனம் புழுங்கினான். அறிஞரை நிமிர்ந்து காணவும் அஞ்சினான். தலை கவிழ்ந்து நாணமுற்று வாய் பேசாது அமர்ந்திருந் தான். ஏதோ எண்ணியவன்போல் எழுந்து அரசன் 'புலவர் பெருமானே! சினத்தால் தவறு

செய்த என்னை மன்னிக்கவேண்டும்' என்று அடிகளில் விழுந்து வணங்கினான்.

அரசன் மனம் புழுத்துடிப்பதுபோல் துடிப்பதை அறிந்த புலவர் 'அருந்தமிழ்ப் பற்றுடை அரசே! முதலில் விளையாட்டாக வட்டினை மறைத்தவன் நானே. அதனை விளையாட்டாக நிகழ்ந்த செயல் என எண்ணாது வேண்டும் என்றே பிழை செய்தேன் எனப் பிழைபட எண்ணி வட்டினை என்மேல் எறிந்தாய். பிறகு நான் வன்மையாகக் கண்டித்து இடித்துக் கூறிய வசைச் சொற்களைக் கேட்டும் 'சோழர் குடிக்கே பிழைத்தோரைப் பொறுக்கும் குணமேன்மை உண்டு' என்பதைப் பணிவால் நிலைநாட்டினாய். 'உனது வாழ்நாள் காவிரி ஆற்று மணலைவிடப் பலவாகி இனிது வாழ்க' என்று புலவர் கூறினார். உடனே இருவர் மனக்கலக்கமும் மாறியது; முற்றும் மறைந்தது. இருவரும் தமிழ் நூல்களைக் கற்று அதன் சுவையை இடைவிடாது நுகர்ந்து மகிழ்வாராயினர்.

மாணவர்களே! சூதாடுவோர் யாவராயினும் சிறப்பை இழப்பர். வட்டாடியதால் அரசனும் புலவரும் மனக்கலக்கம் அடைந்தனர். ஆதலால் தான் 'சூது விரும்பேல்' என்று ஒளவை கூறினாள்.

6. உண்மையே உலகில் வெல்லும்

பாக்டாட் என்னும் நகரத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு அலி என்ற பெயருடைய வணிகன் வாழ்ந்துவந்தான். அவன் பல பொருள்களும்

விற்கும் மளிகை ஒன்றைவைத்து நடத்தி வந்தான். அதனுல் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு இனிமையாக வாழ்ந்தான்.

முகம்மதிய மதத்தைச்சேர்ந்த ஒவ்வொருவனும் 'தூய நகரம்' என்று சிறப்பிக்கப்படும் மெக்காவுக்கு ஒருமுறையாவது செல்லவேண்டும் என்பது முக்கியமான கடமையாகக் கைக்கொள்ளப்பட்டது. அலி என்ற வணிகனுக்கோ தன் வீட்டைவிட்டுச் செல்வதில் சிறிதும் மனமில்லை. ஆனுல் சேர்ந் தாற்போல் மூன்று நாள் இரவு யாத்திரை செய்வோனுய் மெக்காவிற்குச் செல்லும்படி யாரோ தூண்டுவதுபோலக் கனவு கண்டான். இக்கனவு அவன் உள்ளத்தைவிட்டுப் பிரியாமல் வருத்தி வந்தமையால் மெக்காவிற்குச் செல்லவேண்டும் என்று முடிவு செய்தான்.

பிறகு அவன் தனது கடை, அதிலுள்ள பொருள்கள், ஏனைய மதிக்கத்தக்க பொருள்கள் முதலியவற்றை விற்றுப் பணமாக்கிச் சிலவற்றை ஒட்டகத்தின்மீது ஏற்றி மெக்கா செல்வதற்குரிய முன்னேற்பாடுகளைச் செய்தான். வழிச் செல விற்குக் கொஞ்சம் பணம் எடுத்துக்கொண்டு எஞ்சி யிருந்த ஆயிரம் பவுன்களையும் ஒரு பெரிய மண் சாடியில்போட்டு, அதன்மேல் ஒலிவப்பழங்களைப் பரப்பி மூடினுன். அதன் வாயை மெழுகால் அடைத்தான். அந்தச் சாடியைத் தன் நண்ப னிடம் எடுத்துச்சென்று அவனை நோக்கி, 'நண்ப, நான் மெக்கா செல்லப்போகிறேன். ஒலிவப்பழங் கள் நிறைந்துள்ள இச்சாடியை நான் திரும்பி வரு

மளவும் நீ பாதுகாத்துத் தரவேண்டும்' என்றான். அவன் நண்பனும் பொருள்கள் நல்ல பாதுகாப்புடன் வைக்கப்படும் அறையில் வைத்துப்போகும்படி கூறினான். அவ்வாறே அதனை அவ்வறையில் பாதுகாப்பாக வைத்துவிட்டு மெக்காவை நோக்கிப் புறப்பட்டான்.



அலி தன் நண்பனிடம் சாடியை ஒப்படைத்தல்

அலி மெக்கா நகரம் போய்ச்சேர்ந்து தூய நகரங்கள் பலவற்றை ஈடுபாட்டுடன் நேரே கண்டான். தான் எடுத்துச்சென்ற பொருள்களை அவ்வூரிலுள்ள சந்தைகளில் விற்கச் சென்றான். தனது சரக்குகளுக்கு அவ்வூரில் கிடைக்கும் இலாபத்தைவிட எகிப்து நாட்டில் அதிகவிலை கிடைக்கும் என்று பிறர் கூற அறிந்தான். ஆதலால் கெய்ரோ

(Cairo) என்ற நகரத்திற்குச்சென்று, அதிகப் பணம் கிடைக்குமாறு விற்ருன். அவ்வாறு தன் வாணிபத்தில் அதிக ஊதியம் கிடைத்ததனுல், ஏழு ஆண்டுகள் வரை அங்கேயே தங்கி வாழ்க்கை நடத்திஞன்.

இவன் இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில் பாக்டாட் நகரத்தில் அலி அடைக்கலமாக வைத்து விட்டுச் சென்ற ஒலிவப்பழச் சாடியையும், அலியையும் அவன் நண்பன் அறவே மறந்துவிட்டான். ஒருநாள் அவன் தன் மனைவியுடன் உணவு உண்டு கொண்டிருக்கும்போது, மனைவி கணவனைப் பார்த்து, 'எனக்கு ஒலிவப்பழத்தின்மீது மிகவும் ஆசையாய் இருக்கிறது. நம் வீட்டில் ஒன்றும் இல்லையே' என்ருள். அவனுக்கு அவ்வமயம் அலி வைத்துச்சென்ற ஒலிவப்பழச் சாடி நினைவிற்கு வர, அதிலிருந்து ஒன்று எடுத்துவருவதாக மனைவியிடம் கூறினுன். அதற்கு அவள், 'அடைக்கலப் பொருளை எடுப்பது பெரும் பாவமும் கொடுமையுமாகும். வேருெருவரின் பொருளைத் தம்முடையதுபோல் எண்ணி உரிமையாக்கிக் கொள்வது தவறு. அவ்வாறிருப்பினும் அப்பழங்களும் இப்பொழுது அழுகிப்போயிருக்கும்' என்று கூறினுள்.

அவன் மனைவியின் சொற்களைக் கேளாமல் சரக்கறைக்குச் சென்று அலி வைத்திருந்த சாடியைத் திறந்துபார்த்தான்; மேலேயிருந்த பழங்கள் அழுகியிருந்தன; அவைகளைக் கீழே தள்ளினுன்; அதன்கீழ்ப் பொன் நாணயங்களைக் கண்டான்.

உடனே மனைவியிடம் வந்து, 'நீ கூறியபடியே பழங்கள் அழுகிவிட்டன. ஆதலால் சாடியை இருந்தபடியே வைத்துவிட்டேன்' என்று சொன்னான். 'நீர் அதைத் தொடாமலே இருந்திருந்தால் நலமாய் இருந்திருக்கும். இச்செயலால் தீமை நேராதபடி இருக்கவேண்டும் என்று இறைவனை வணங்குகின்றேன்' என்றாள்.

அலியின் சாடியில் பொற்காசுகளைக் கண்ட நண்பனுக்கு இரவில் தூக்கமே வரவில்லை. 'பணம் என்றால் யாவரும் ஆசையடைவர் அல்லவா? அவன் மறுநாள் காலையில் கடைக்குச்சென்று புதுமையான ஒலிவப்பழங்களை வாங்கி நிரப்பி அதிலுள்ள பொன் நாணயங்களை அபகரித்துக் கொண்டு வேறிடத்தில் புதைத்துவைத்தான். மேலும் அப்பேராசை பிடித்தவன், அலி இனித் திரும்பி வரமாட்டான் என்றும் அவ்வாறு திரும்பி வரினும் அப்பொன் நாணயங்களை அலிக்குத் திருப்பிக் கொடுப்பதில்லை என்றும் உறுதி கொண்டான்.

அவன் நம்பிக்கைமோசம்செய்யத்தீர்மானித்த சில வாரங்களில் அலி திரும்பி வந்தனன். வந்த அலி தன் நண்பன் வீடு அடைந்து க்ஷேமலாபங்களைப்பற்றிச் சிறிதுநேரம் மனம் கலந்துபேசி விட்டுத் தான் அவனிடம் முன்பு வைத்துச்சென்ற சாடியைக் கேட்டான். உடனே சாடியை நண்பனும் அலியிடம் கொடுத்தனன். அலி சாடியைத் தன் வீட்டிற்குக் கொண்டுபோய், அதில் தான் வைத்திருந்த பொன் நாணயங்கள் இருக்கின்றனவா என்று சாடியைத் திறந்துபார்த்தான். தலைகீழாகக்

கொட்டினன்; அதில் பழங்களைத் தவிர வேறொன்றையும் காணவில்லை. சாடி தன்னுடையதே என்பதை நன்கு பார்த்து அறிந்த அலி, நேரே தன் நண்பன் வீட்டை அடைந்தான். அலி நண்பன் அவனைப் பார்த்து வியப்பு அடைந்தவன்போல் நடித்து 'என்னிடம் ஏதேனும் உதவியை எதிர்பார்க்கின்ருயோ?' என்ருன். அலி அவனைப் பார்த்து, 'நண்ப! இச்சாடியின்மேல் ஒலிவப்பழங்களை வைத்து அதன் அடியில் பொன் நாணயங்களையும் வைத்திருந்தேன். இன்று பார்த்ததில் நாணயங்கள் ஒன்றைக்கூடக் காணேன். அவை மறைந்தவிதம் தெரியவில்லை' என்ருன். அலியின் நண்பன் வெறுப்புடன் 'சாடியில் பழங்கள்தானே இருப்பதாகக் கூறிஞய். நீ வைத்துச் சென்ற சாடியோ, வைத்த இடத்திலேயே இருந்தது. பொன்னே மாணிக்கமோ அதில் வைத்திருக்கலாம். அவ்வாறு வைத்திருப்பின் அதில்தான் இருக்கும். கால் முளைத்து ஓரிடமும் சென்றிராது' என்று பேராசையினுல் விடாப்பிடியாகச் சாதித்தான்.

ஆதலால் அலி தன் வழக்கை நீதிபதியிடம் சென்று முறையிட்டான். அலி, 'நீதிமன்றத் தலைவரே! நான் இந்த மனிதனை உத்தம நண்பனுகவும், நாணயம் தவருதவனுகவும் எண்ணி ஒருவரையும் சாட்சிக்கு வைத்துக்கொள்ளாமல் பொன் நாணயங்களைச் சாடியின் அடியிலும், பழங்களைச் சாடியின் மேலும் வைத்து அடைக்கலப் பொருளாகவைத்து விட்டுச் சென்றேன். பொன் நாணயங்களைப் போடும்போது ஒருவரையும் சாட்சியாக வைத்துக்

கொள்ளவில்லை' என்றான். எதிரியை நோக்கி நீதிபதி, 'நீ அந்தப் பொன் நாணயங்களை எடுக்கவில்லை என்று சத்தியம் செய்வாயா?' என்று கேட்க அவனும் சத்தியம் செய்தான். அலிக்குத் தக்க சாட்சிகள் இல்லாமையால் வழக்கு விரோதமாக முடிந்தது.

அலி தனது வழக்கு வெற்றி பெறுதலைக் கண்டு வருந்தி ஒருவாறு தெளிவடைந்து சுல்தானிடம் மேல் விசாரணை செய்யுமாறு நடந்தவற்றை எழுதிக் கொடுத்தான். அக்காலத்தில் பாக்தாதை ஆண்ட சுல்தான் நாள்தோறும் மாறுவேடம் பூண்டு ஊரை ஆராய்வதற்காகச் செல்வது வழக்கம்.

ஒருநாள் மாலை சுல்தான் வழக்கம்போல் மாறு வேடம் பூண்டு, தன் முதல் அமைச்சனுடன் நகர் வலம் வந்தான். ஒரு சிறு தெரு வழியாகச் செல்லும்போது, அங்குச் சில சிறுவர் ஒற்றுமையுடன் விளையாடும் ஆரவாரம் கேட்டது. அங்குச் சுல்தான் சென்றான். அப்பொழுது சிறுவர் 'நியாயாதிபதியும் குற்றவாளிகளும்' என்ற செய்தியைக் குறிக்கும் விளையாட்டை விளையாடத் தொடங்கினர்.

ஒரு சிறுவன், 'அலியும் பொன் நாணயங்களைத் திருடிய வணிகனும்' என்னும் வழக்கை விசாரணை செய்யத் தொடங்கலாம்' என்றான். ஒரு சிறுவன் நீதிபதியாக அமர்ந்தான். மற்றொருவன் அலியாகவும், வேறொருவன் வியாபாரியாகவும் எதிர் எதிராக நின்றனர். நீதிபதி வழக்கை விசாரிக்கலுற்றான்.

அலியாக நடிக்கும் சிறுவனைப் பார்த்து, 'வணிகன் உனக்குச் செய்த மோசம் யாது?' என்று

போலி நீதிபதி வினவினன். உடனே அலி நீதி மன்றத்தில் யாது வாக்குமூலம் கொடுத்தானே அதனையே கூறினன். பிறகு வணிகனுக நடிக்கும் சிறுவனைப் பார்த்து, 'நீ உன்மீது பொருத்தப்பட்ட குற்றத்திற்கு என்ன விடை கூறுகிருய்' என்று கேட்டான். முன் நீதிமன்றத்தில் உண்மை வணி கன் கூறியதுபோலவே மறுத்துக் கூறினன். சத்தியம் பண்ணும்முன் நீதிபதி 'சாடியைப் பார்க்க வேண்டும். கொணர்க' என்று அலிக்கு ஆணையிட் டான். அவ்வாறே சாடி கொணரப்பட்டது. இரு வரும் சாடியின் அடையாளத்தை முற்றும் ஒப்புக் கொண்ட பிறகு நீதிபதி சாடியைத் திறக்குமாறு சொல்லி, ஒலிவப்பழம் ஒன்றை வாயில்போட்டுச் சுவைபார்ப்பதுபோன்று நடித்து, 'இது புதிய பழம் போன்று இனிமையாய் இருக்கிறதே' என்ருன். மேலும் அவன், 'ஏழு ஆண்டுகளுக்குமுன் வைத்த பழம் இவ்வாறு இராதே. ஆதலால் இதன் உண்மையை ஒலிவப்பழ வணிகன்மூலம் அறிய வேண்டும்' என்ருன். உடனே ஒரு பையன் பழ வியாபாரியாக நடிக்க இசைந்த சிறுவனை அழைத்து வந்தான். நீதிபதி அவனைப் பார்த்து, 'நீ ஒலிவப் பழ வணிகனு? நான் ஒரு வழக்கில் உன் கருத்தைக் கேட்கவே இங்கு அழைத்தேன்' என்ருன். பிறகு சில பழங்களை அவனிடம் கொடுத்து, 'இப்பழங் கள் ஒரு சாடியில் எவ்வளவு ஆண்டுகள் இருந் திருக்கக்கூடும். கூறுக' என்ருன். அவ்வணிகன் வாயில் போட்டுச் சோதிப்பதுபோல் நடித்து, 'நீதிபதியே, இவை புதியவை. இவை பழுத்து ஒரு ஆண்டுதான் இருக்கும்' என்ருன்.

நீதிபதி அவ்வணிகனைப் பார்த்து, 'அலி இப் பழங்களை ஏழு ஆண்டுகளுக்குமுன் சாடியில் போட்டதாகக் கூறுகிருனே!' என்ருன். அதற்கு வணிகன் 'ஏழு ஆண்டில் பழங்கள் முழுவதும் கெட்டேபோயிருக்கும். மேலும் இவை புதுமை யாகவும், சுவையுடையனவாகவும் உள்ளன' என்ருன். உடனே நீதிபதி அலியை நம்பிக்கை மோசம் செய்த வணிகனை நோக்கி, 'நீ திருடன். உத்தம நண்பனை வஞ்சித்தவன்; ஆதலால் உனக்கு தண்டனை விதிக்கிறேன்' என்று கூறி வேலைக்கார ராக நடித்த சிறுவரைப் பார்த்து 'இவனைச் சிறையில் அடையுங்கள்' என்று ஆணையிட்டான். அவர் களும் அவனை இழுத்துச்சென்று சிறையில் அடைத்தனர். அத்துடன் விளையாட்டும் முடிந்தது.

இந்நிகழ்ச்சிகளை நேரே கண்ட காவலன், நீதிபதியாய் நடித்த சிறுவனது நுண்ணறிவைக் கண்டு வியந்து, அடுத்தநாள் அச்சிறுவனைக் கொண்டே உண்மை அலியின் வழக்கை விசாரிக் கச் செய்தான். உண்மை வியாபாரி ஒருவன் வர வழைக்கப்பட்டு ஒலிவப்பழத்தின் இயல்பைக் கேட்க அவன், 'இவை ஒரு ஆண்டிற்குள் பறிக்கப் பட்டவைகளே' என்று உறுதியாகச் சாட்சி கூறினுன்.

அலியை நம்பிக்கை மோசம் செய்த வணிகன் வேறு வழியின்றி உண்மையை ஒப்புக்கொண்டான். பின்பு அந்தப் பொன் நாணயங்களைச் சுல்தான் அலிக்குக் வாங்கித்தர அவன் மிகுந்த உற்சாகத் துடன் பெற்று, அவர்களை வாயார மனமார வாழ்த்திச் சென்ருன்.

மாணவர்களே! உண்மையே எக்காலும் வெல்லும். பொய் ஒருநாள் யாவரும் அறிய வெளிப்பட்டுப் பழியை உண்டாக்கும்.

7. ஜேம்ஸ் வாட்

'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்ற தொடர்க்கு ஏற்ப, அறிவு ஒன்றினைப் பெற்றவரே எல்லாச் செல்வமும் உடையவர் ஆவர். இவ்வறிவு அழியாதபடி முயற்சி செய்து வளர்த்ததால் மேல் நாட்டினர் இவ்வுலகில் ஆற்றல், பொருள், புகழ் முதலியன யாவும் பெற்றுள்ளார்கள். மக்கள் உலகம் முழுவதும் நிலத்திலும் நீரிலும் சென்று உலவிவருவதற்கு ஏற்ற நீராவி இயந்திரங்களை அமைத்துக் கொடுத்ததும் இவ்வறிவின் ஆற்றலே. இந்நீராவியின் உதவியால் கணக்கற்ற வேலைகள் செய்யப்பட்டு, மக்கள் அன்றாட வாழ்க்கை எளிமையாக நடத்த இயலுகிறது. தன் அறிவைப் பயன்படுத்தி உலகிற்கு நீராவியின் ஆற்றலைக் கண்ட ஜேம்ஸ் வாட் என்ற பேரறிஞரின் வரலாற்றைக் காண்போம்.

உலகம் புகழும் ஐரோப்பிய நாட்டு பிரித்தானிய தீவின் வடக்கே உள்ள ஸ்காட்லாந்து நாட்டில் கிரீனக் நகரில் கி.பி. 1736 ஆம் ஆண்டில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் ஜேம்ஸ் வாட்; இளமையில் உடல் வலிமையற்று இருந்ததால் பள்ளிக்குச் செல்லாமலேயே வீட்டிலே கல்வி கற்றார்; சின்னஞ்சிறு வயதிலேயே கரித்துண்டி

ஞல் ஏதேதோ படம் வரைந்து, 'இதோ ஒரு எஞ்சின்' என்று தாய் தந்தையருக்குக் காண்பிப்பார்.

இவர் இளைஞராக இருக்கும்போது ஒரு நாள் குளிர்மிகுதியாக இருத்ததால் வீட்டுக் கதவுகளும் சன்னல்களும் மூடப்பெற்றுந் திரைகளும் தொங்க விடப்பட்டன. குளிர் நீங்க நெருப்பு மூட்டமும் போடப்பட்டது. அவ்வடுப்பின்மீது வெந்நீர்க் கெட்டில் ஒன்றில் நீர் கொதித்துக்கொண்டிருந்தது. ஜேம்ஸ் வாட்டின் தாய் தேநீர் தயாரித்துக்கொண் டிருந்தாள்.

அப்பொழுது கெட்டில் மூக்கின் மூலம் நீராவி உஸ் உஸ் என்று கிளம்பியது. அங்கு குளிர் காய்ந்துகொண்டிருந்த இளைஞரான வாட் அக் குழாய் வழியே வரும் நீராவியையே கண்ணும் கருத்துமாய் உற்று நோக்கியபடி இருந்தார். கொதி நீரிலிருந்து வரும் நீராவி சிற்சில நேரங்களில் அக்கெட்டிலின் மேல்மூடியை மெல்ல மேலே கிளப்பி வெண்மையான ஆவியாய் குப் குப் என்று வெளியேறிக்கொண்டிருந்தது. அது வெளிச் செல்லும்போது மூடிதிறப்பதும் பின் மூடிக்கொள்வதுமாக இருந்தது. இந்த ஓசையும் காட்சியும் ஜேம்ஸ் வாட்டுக்கு மிக இனிமையாய் இருந்தது. இந்நேரத்திற்குள் தேநீர் தயாராகி விட்டது. தாய் வாட்டைத் தேநீர் குடிக்க அழைத் தாள். நீராவிக் கனவில் ஆழ்ந்த ஜேம்ஸுக்கு தாய் அழைத்தது காதில் படவில்லை. உடனே தாய் சினந்து உரக்கக் கூவினள். தேநீர் குடித்துத் திரும்பிய வாட்டின் காட்சியும் கனவும் மீண்டும் நீராவியின் ஆற்றலை ஆராயத் தொடங்கின.

வெந்நீர்க் கெட்டிலில் இருந்து வெளிவரும் நீராவியுடன் வாட் பல நேரம் விளையாடுவார். இவ்வாறிருக்கையில் குடும்பப் பொறுப்பு அவர் தலையில் விழுந்தது. வேலைக்காக அங்கும் இங்கும் அலைந்தார். கிளாஸ்கோவில் கணக்கியலுக்கு வேண்டிய துணைக்கருவிகள் ஆற்றும் வேலை கிடைத்தது. அங்கிருந்து ஒரு மூக்குக்கண்ணாடி கடையில் பணியாற்றினார். ஓய்வு நேரங்களில் ஜேம்ஸ் நீராவியின் ஆற்றலைப் பலவிதமாக ஆராய்ச்சி செய்துகொண்டேயிருந்தார்.

வாட் அறிவை மேன்மேலும் பெருக்க ஆசை கொண்டு ஜான் மார்கன் என்பவரின் தொழிற்சாலையில் தொழில் கற்கச் சேர்ந்தார். வைகறையில் எழுந்து இரண்டு மணிநேரம் கூலி வேலைசெய்து அதனால் கிடைத்த ஊதியத்தை மாதந்தோறும் கட்டணம் ஆகக்கட்டி வந்தார்.

நீராவி எஞ்சினைச் செய்யவேண்டும் என்னும் ஆசையை அவர் இன்னும் கைவிடவில்லை. 'நியூ கோம்' என்ற நீராவி எஞ்சின் பம்ப் ஒன்றைப் பழுதுபார்க்கும்போது நீராவி எஞ்சினைப் பற்றிப் பல அருமையான செய்திகளை அறிந்தார்.

டாக்டர் ரேபக் என்பவர் நீராவி எஞ்சின் அமைக்க வாட்டிற்குப் பொருள் உதவி செய்தார். அப்பொருள் கொண்டு ஜேம்ஸ் ஓர் எஞ்சினை அமைத்தார். ஆனால் அது பல இடங்களில் ஒழுகிற்று. மேலும் மூன்று ஆண்டுகள் சென்றன.

பர்மிங்ஹாமிலுள்ள மாத்தியூ போல்டன் என்னும் செல்வர் மீண்டும் இம்முயற்சியில் ஈடுபடும்

படி வாட்டைத் தாண்டினர். முயற்சி வெற்றியளித்தது. அக்காலத்தில் நிலக்கரிச் சுரங்கங்களில் நீராவி இயந்திரங்கள் மிகுதியும் பயன்படுத்தப் பட்டன. பொருளும் குவிந்தது.

ஜேம்ஸின் ஆற்றலைக் கேள்வியுற்ற ருஷ்ய நாட்டு மன்னர் ஆண்டிற்கு ரூபாய் 25,000 ஊதியம் தருவதாக அவரை அழைத்தார். ஆனால் வாட் அதனை ஏற்கவில்லை. பிறகு தன் ஆற்றலால் பல இயந்திரங்களை ஆய்ந்து கண்டார்.

நீராவி இயந்திரத்தை ஜேம்ஸ் கண்டுபிடிக்காதிருந்தால் இன்று புகை வண்டியே ஓடாது. பல வகையான மில்களும் தோன்றி இரா.

மாணவர்களே! 'முயற்சி திருவினை ஆக்கும்' 'என் கடன் பணி செய்து கிடப்பதே' முதலிய தொடர்களைப் பின்பற்றி வாழ்க்கையில் முன்னேறிப் புகழ் அடைவீராக.

8. மங்கோ பார்க்கின் ஆப்பிரிக்கச் செலவு

இங்கிலாந்தில் ஆப்பிரிக்காக் கழகம் என்று ஒன்று நிறுவப்பட்டிருந்தது. ஒவ்வொரு சனிக்கிழமையும் அக்கழகத்தினர் இலண்டன் மாநகரில் உள்ள உணவு விடுதியில் கூடுவது வழக்கம். அக்கூட்டத்துக்கு நாட்டு அறிஞர் பலரும், ராயல் கழக அறிவியல் அறிஞர்களும் வந்து கலந்து கொள்வர். அக்கழகத்தின் தலைவர் குக் என்பவரின் நண்பர்.

ஒருநாள் அவர் கழக உறுப்பினர்களைப் பார்த்து, 'நாம் யாவரும் ஆப்பிரிக்கா கண்டத்தின் படத்தை உருவாக்குவதில் ஊக்கம் கொண்டுள்ளோம். அக் கண்டத்தைக் கண்டறியப் பற்பலரும் முயன்று பயன் கிடைக்கவில்லை. நைஜர் என்ற பெயரை மட்டும் காதால் கேட்டுள்ளோமே ஒழிய அவ் வாற்றை நேரே பார்த்தவர் ஒருவருமில்லை. அவ் வாற்றின் கரையில் டிம்பக்டு என்ற நகரம் இருக் கிறது என்றும், அது இலண்டனைப்போல் செல் வச் சிறப்புடையதென்றும், அறிஞர் நிறைந்த இடம் என்றும், மூரர்களின் சிறப்பை நிலைநாட்டு வது என்றும் பலர் சொல்ல அறிந்துள்ளோம். மூரர்களையும் நைஜர் ஆற்றையும் நேரே காணச் சிலர் செல்லவேண்டும்' என்றார்.

பலர் அம்முயற்சியில் ஈடுபட்டுத் தோற்றனர். 1793 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காக்கழகத் தலைவர் ஒருவர் அதனைக் கண்டறியும் வேலைக்கு முன் வந்துள்ளதாக கழகத்தாருக்குத் தெரிவித்தார். ஆயினும் மிக இளைஞரான அவர் அவ்வேலைக்குத் தகுதியுடையவரா என்று ஐயுற்றார். அவ்விளைஞரே மங்கோபார்க்.

1771 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் நாள் ஸ்காட்லந்தில் செல்கர்க் என்னும் ஊரின் அண்மையில் அவரது தந்தையாரின் பண்ணையில் பிறந்தார். இளமையிலேயே கல்வி கற்கப் பேரார் வம் கொண்ட அவர் தமது பதினைந்தாம் ஆண்டில் மருத்துவக்கலை பயில ஆசை கொண்டார். ஆதலால் அவர் தந்தை ஒரு மருத்துவரிடம் தொழில் பயில விட்டனர். பதினெட்டாம் ஆண்

டிலே எடின்பரோ பல்கலைக் கழகத்தில் மருத்துவம் பயிலச்சென்று மூன்றாண்டுகளில் மருத்துவப் பட்டம் பெற்றார். அதன்பின் அவருக்கு நாடு கடந்து சென்று புதுமை காணும் ஆசை உண்டாயிற்று. ஓராண்டு கிழக்கிந்தியத் தீவுகளில் ஒரு கப்பல் மருத்துவராக இருந்தார். அங்கிருந்து இங்கிலாந்து வந்தபோதுதான் ஆப்பிரிக்காக் கழகத்தினரின் நோக்கம் அறிந்து மங்கோபார்க் அக்கழகத்திற்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினார்.

அக்கழகம் இசைவுதர மங்கோபார்க் 1795 ஆம் ஆண்டு மே திங்களில் இங்கிலாந்தினின்று கிளம்பினார். ஒரு திங்கள் பயணம் செய்து ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையில் 'காம்பியா' என்ற ஆற்றின் கழிமுகத்தில் வந்து இறங்கினார். அங்கிருந்து இருநூறு மைலுக்கு அப்பால் இருக்கும் நாட்டை நோக்கிச் சென்றார். அங்குள்ள ஒரு பேரூரில் ஆங்கில மருத்துவர் ஒருவர் இருந்தார். ஆறு திங்கள், அதாவது மழைகாலம் முடியும்வரை, அவரது விருந்தினராக இருந்தார். அங்கு தங்கிய நாட்களுக்குள் நீக்ரோ மொழியைப் பேசக் கற்றார். தாம் செல்ல இருக்கும் நாடுகளைப்பற்றியும், அந்நாட்டில் வாழும் மக்களைப்பற்றியும் சில செய்திகளைப் பலர் மூலமாகக் கேட்டறிந்தார். தங்கத் தூள்கள், தந்தங்கள் முதலியவைகளை எடுத்துக் கொண்டு அடிமை நீக்ரோவர் நூற்றுக்கணக்கான மைல் தொலைவு நடந்தே சென்ற கொடுமையான காட்சியைக் கண்டு திடுக்கிட்டார்.

மங்கோபார்க் 1795 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் நாள் மருத்துவரிடம் விடை

பெற்றுப் பயணத்தைத் தொடங்கினர். அவருடன் நீக்ரோ பணியாளர் இருவர், முஸ்லீம் நீக்ரோ ஒருவர், நீக்ரோ பொற்கொல்லர் ஒருவர், அடிமை வர்ணிகர் இருவர் ஆகியோர் சென்றனர். பார்க் ஒரு குதிரையின்மேல் சென்றார். அவருக்குரிய பொருள்கள் இரண்டு கழுதைகளின்மேல் சென்றன.

மூன்று நாட்களுக்குப் பிறகு பார்க் குழுவினர் நீக்ரோவர் 'மாடினா' என்ற பெயருடைய ஊர் ஒன்றினை அடைந்தனர். அவ்வூர் ஒரு சிறு நாட்டின் தலை நகரமாகும். அந்நாட்டுத் தலைவன் பார்க்கை வரவேற்று உபசரித்துத்தன் நாட்டு வழியே செல்ல அநுமதி கொடுத்ததோடன்றி ஒரு வழி காட்டியையும் அனுப்பினன். வழிநடைப் பயணத்தின் துன்பங்களைக்கூறி, அவர்கள் நல்லமுறையில் பயணம் செய்ய அருள்புரியுமாறு கடவுளை வேண்டினன். பார்க்கும் பயணத்தைத் தொடர்ந்தார்.

பார்க் குழுவினர் காம்பியா நதிக்கும், செனிகல் நதிக்கும் இடைப்பட்ட நாட்டிற்குச்சென்றபோது, பெரிய இருள்மிக்க காட்டைக் கடக்க வேண்டியவர் ஆயினர். நரிகள், ஓநாய்கள் இவைகளின் ஒலி பேராரவாரத்துடன் விளங்கின. அங்கு வசித்து வந்த நீக்ரோவர் பார்க் இங்கு வந்த முக்கியமான நோக்கத்தைக் கேட்டு 'நைஜரைக் காணவா இவ்வளவு தொலை வரவேண்டும்? உங்கள் ஊரில் நதிகளே இல்லையா?' என்று கேட்டுச் சிரித்தனர். பார்க் அவர்களோடு அன்புடன் பழகினர்.

பார்க் இவ்வாறு பிரயாணம் செய்து தம்முடன் வந்த பொற்கொல்லரின் ஊரை அடைந்தார். அப்

பகுதியை ஆண்ட அரசன் பார்க்கை வரவேற்றுத் தன் நட்பைப் புலப்படுத்தும் அறிகுறியாக வெண் காளை ஒன்றைத் தந்தான். ஒரு வழிகாட்டியையும் உடன் அனுப்பினன்.

பார்க் அடுத்துள்ள கார்ட்டா நாட்டை அடைந் தார். அந்நாட்டை ஆளும் அரசன் தோலால் மூடப்பெற்ற மண்மேடையையே இருப்பிடமாகக் கொண்டு அமர்ந்திருந்தான். அவனுக்கு வலப் புறத்தில் பேராற்றல் நிறைந்த வீரர்களும், இடப் புறத்தில் மாதரும் குழந்தைகளும் நின்று கொண் டிருந்தனர். அரசன் பார்க்கை இன்சொற்கள் கூறி அன்போடு வரவேற்று, வழியில் நேரக்கூடிய துன்பங்களைப்பற்றிச் சொன்னன். பார்க் அச் சொற்களை ஏற்றுத் தம் வழியைச் சிறிது மாற்றிக் கொள்ள உறுதிசெய்தார்.

கார்ட்டாவில் இருந்துகொண்டே, அடுத்த நாட்டு மூர் அரசனை அலிக்கு, அவன் நாட்டின் வழியேபோக அனுமதி வேண்டும் என்று எழுதி அனுப்பினர். அவ்வாணையை எதிர்பார்த்துச் சில நாட்கள் கார்ட்டாவிலேயே காத்திருந்தனர். ஒரு நாள் மூர் வீரர் சிலர் வந்து தங்கள் அரசனது ஆணையைக் கூறி அழைத்துச் சென்றனர். 'பெனவன்' என்ற இடத்தில் அலி பார்க்கை வர வேற்ருன்.

பார்க்குக்கு மூரமொழி தெரியாத காரணத் தினல், அவரோடு மனம் கலந்து பேச இயல வில்லை. பார்க் ஒரு கிறித்தவர். ஆதலால் நம் நாட்டைப்பற்றி அறியவந்த ஒற்றர் என முடிவு

செய்தான். |ஆதலால் அலி மங்கோபார்க்கின் தலையை வெட்டுவதா, கைகளை வாங்குவதா, அன்றிக் கண்களைப் பிடுங்குவதா என்ற செய்தி களைப்பற்றித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினான். பார்க்கைப் பார்த்த அலியின் மனைவி பாதிமா, இரக்கம் காட்டியதால் அலி பார்க்கைச் சிறிதும் துன்புறுத்தாது அவரது பொருள்களைக் கொடுத்து அனுப்பினான்.

அங்கிருந்து பயணத்தைப் பார்க் தொடர்ந்தார். பல இடங்கட்கும் சென்று இறுதியில் பம்பாரா என்னும் ஊரை அடைந்து இருப்பிடமும் நல்ல உணவும் பெற்றார். இரண்டு நாட்கள் சென்ற பிறகு அந்த ஊரிலிருந்து சிலர் செஜோ என்னும் ஊரிற்குக் கிளம்பினர். பார்க் அவர்களுடன் வருவதாகக் கிளம்பினாலும் அவர்களைப் பின் தொடர முடியவில்லை. அவர் குதிரையும் வலுவிழந்து இருந்தது. ஆதலால் அவர் தமது குதிரையை முன்னே ஓட்டிக்கொண்டு நடந்தே போனார். அவ்வாறு செல்லும்போது செஜோ நகரத்திற்கு ஐந்து மைல் தூரத்தில் ஒரு பெரிய நதியைக் கண்டார். அது வெஸ்ட்மினிஸ்டர் அருகே ஆரவாரத்துடன் ஓடும் தேம்ஸ் என்ற நதியைப்போல அலைகளுடன் நைஜர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. பார்க் விரைந்து அவ்வாற்றின் கரையருகே சென்று அதன் நீரை இரு கையாலும் அள்ளி அள்ளிப் பருகினார். அவ்வமயம் பார்க்கின் முகத்தோற்றம் அன்று மலர்ந்த தாமரைபோல ஒளியுடன் காட்சியளித்தது. பார்க் தம் எண்ணம் நிறைவேற அருளிய இறைவனை

வாயார மனமார வாழ்த்தினர். பிறகு பார்க் பல இடங்களைப் பார்த்துக்கொண்டு கி.பி. 1797 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 22 ஆம் நாள் இங்கிலாந்து மீண்டார்.

மங்கோபார்க் ஆப்பிரிக்காக்கழகத் தலைவரைக் கண்டு தன் ஆப்பிரிக்கச் செலவைப்பற்றி விளக்கமாகச் சொன்னர். பிறகு அவைகளைத் தெளிவாக ஒரு நூலாக எழுதி வெளியிட்டார். அந்நூலில் நீக்ரோவரின் பண்புகள்—மூட நம்பிக்கைகள்—நீக்ரோ அடிமைகளின் துன்பம் நிறைந்த வாழ்க்கை மூரர்களின் முரட்டு இயல்பும் கொடுமையும் முதலியவற்றை நன்கு விளக்கியுள்ளார். பார்க்கின் நூலைப் படித்த வணிகர் 'நைஜரின் உற்பத்தி இடம், கடலொடு கலக்கும் இடம், கடல் வழியாக வாணிகக் கலங்கள் டிம்பக்டுவுக்குச் சென்று வியாபாரம் செய்ய வசதி முதலியவற்றை அறிய வேண்டும்' என்று விரும்பினர். அரசினர் வேண்டுகோட்கிணங்கிப் பார்க் இரண்டாம்முறை ஆப்பிரிக்கா செல்ல இசைந்தார்.

பார்க் 1805 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் புறப்பட்டு நாற்பதின்மரைத் துணையாக அழைத்துக்கொண்டு சென்ருர். உடன் சென்றவர் ஆப்பிரிக்க வெப்பு நோயினுல் வருந்தி ஒருவர்பின் ஒருவராக இறந்தனர். பார்க் தன் தீவிர முயற்சியால் 'சையேனுலியோனும், பிரஞ்சுகினியாவும் கூடும் இடத்தில் ஒரு சிறு ஊற்றில் நைஜர் உற்பத்தியாகி டிம்பக்டுவுக்கு அப்பால் பாறைகளாலும் தீவுகளாலும் பல சிறு பிரிவுகளாகச் சிதறி மிக்க ஒலியுடன் ஓடுகிறது; கடைசியாகத் தெற்கு நோக்கிச்

சென்று கினிகுடாவில் கலக்கிறது' என்பதைக் கண்டார். டிம்பக்டுவில்தான் பார்க்குக்கும் மூரர்க்கும் போர் மூண்டது; போரைத் தனியாக நின்று சமாளிக்க இயலாததால் நைஜர் ஆற்றில் குதித்து மறைந்தார்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகே பார்க்கின் மறைவு ஆங்கிலேயர்க்குத் தெரிந்தது. பிறகு ஆங்கில வணிகர் நடமாட்டம் அதிகமாயிற்று. நைஜரின் குறுக்கே பாலம் கட்டியபோது அதில் 'மங்கோ பார்க் நினைவாக' என்று தொடங்கி, அவர் செய்த தொண்டு எழுதப்பட்டது. அவர் பிறந்த செல்சர்க் நகரின் சந்தை கூடும் இடத்தில் அவரது உருவச்சிலை வைக்கப்பட்டது.

9. பரிதிமாற் கலைஞர்

[கி.பி. 1870—1903]

மூவேந்தர் ஆண்ட நாடுகள் முறையே சேர நாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று வழங்கப் படும். இவைகளில் தமிழ் வளர்த்த சிறப்பு பாண் டிய நாட்டிற்கே உரியது. தலை, இடை, கடை என்ற மூன்று சங்கங்கள் இருந்து பல தமிழ் நூல்களை இயற்றி உலகிற்குத் தந்தநாடு பாண்டிய நாடேயாகும். இதன் தலைநகர் மதுரை. இது வரலாற்றால் சிறப் புடையதோடு, சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி போன்ற நூல்களிலே மிகவும் சிறப்பிக்கப்பட்டுள் ளது. இந்நகரின் அருகே வீராச்சேரி என்னும் சிற்றூரில் கி.பி. 1870 ஆம் ஆண்டு ஜூலை ஆறும்

தேதி புதன்கிழமை கோவிந்த சிவனாரின் அருந் தவப்புதல்வராகப்பரிதிமாற் கலைஞர் என்ற சூரிய நாராயண சாஸ்திரியார் தோன்றினார்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற தொடர்க்கு ஏற்ப இவர் தொடக்கப் படிப்பைத் தமிழ்த் திண்ணைப் பள்ளியிலேயே படித்தார். தந்தையிடம் ஓரளவு வடமொழி கற்றார். 1880 ஆம் ஆண்டு மதுரையைச் சேர்ந்த பசுமலைப் பள்ளியிலே சேர்ந்தார். அப்பள்ளியில் தமிழாசிரியர் தூண்டுகோலால் தமிழ் படித்தார். மதுரை மாவட்ட உயர்பள்ளியில் சேர்ந்த 'பரிதி' மதுரைக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்து பணியாற்றி அப்போது ஓய்வு பெற்றிருந்த பெரும் புலவர் சு. சபாபதி முதலியாரிடம் தமிழ் கற்கத்தொடங்கினார். இவரிடம் பரிதி, சங்க நூல்களையும் இலக்கிய இலக்கணங்களையும் எல்லாம் நன்கு கற்றார். பதினைந்தாவது வயது முதல் இருபதாம் வயது வரை முதலியாரிடம் பரிதி தமிழ் கற்று நல்லறிவும் ஆற்றலும் பெற்றார்.

உயர்நிலைப் பள்ளியில் கற்கும்போதே மதுரையில் இருந்த பாலகிருஷ்ணநாயுடு என்பவரிடம் மற்போரும் சிலம்பமும் கற்றார். கல்வியிலும், உடற்பயிற்சியிலும் ஊக்கம் காட்டி உயர்ந்த இவர், பள்ளியில் முதல் மாணவனாகத் திகழ்ந்தார்.

1888 ஆம் ஆண்டில் பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சிபெற்ற இவர் மதுரைக் கல்லூரியில் எப். ஏ. வகுப்பில் சேர்ந்தார். இவரது அறிவுத் திறமையைக் கண்டு வியந்த பாஸ்கர சேதுபதியவர்கள்

இவருக்கு உதவிச் சம்பளம் கொடுத்தனர். எப். ஏ. வகுப்பில் கற்றுக்கொண்டே 'மாலா பஞ்சகம்' என்ற ஒரு நூலை இயற்றிப் புகழ்பெற்ருர். 1890 ஆம் ஆண்டில் எப். ஏ. தேர்வில் வெற்றி பெற்று மதுரையில் வாழ்ந்த பெருஞ் செல்வரான சோமசுந்தர முதலியாரின் மகன் விசுவநாத முதலியாருடன் சென்னை கிறித்துவக் கல்லூரியில் பி. ஏ பட்டப் படிப்பில் சேர்ந்து கற்ருர். சென்னையில் இருவரும் செங்கல்வராய முதலியார் வீட்டில் தங்கிப் பயின்றனர்.

அப்போது கிறித்துவர் கல்லூரித் தலைவராக இருந்தவர் டாக்டர் மில்லர் என்பவர். ஸ்காட்லந்து நாட்டைச் சேர்ந்த இவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர்; துறவு நிலையை மேற்கொண்டவர்; பெருஞ்செல்வர்; கல்லூரிக்குப் பெரும்புகழ் தேடியவர். பழுத்த மரத்தைப் பறவைகள் நாடிச் செல்வதுபோல் இவரை நாடி மாணவர் திரள் திரளாக வந்து சேர்ந்தனர். அவர் சென்னை சட்ட சபை உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும் தொண்டாற்றிஞர்.

பரிதி பி. ஏ. வகுப்பில் சேர்ந்தவுடன் ஷேக்ஸ்பியர் பாடம் கற்பிக்க டாக்டர் மில்லர் வந்தார். மழையை எதிர்நோக்கும் இளம்பயிர் போல் மாணவர் அவர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து அமர்ந்திருந்தனர். அவ்வகுப்பில் நுழைந்த மில்லருக்குப் பரிதியின் கொள்கை, அஞ்சாமை முதலியன பெருமதிப்பைக் கொடுத்தன.

தமிழறிவு மிகுதியும் பெற்ற 'பரிதி' தத்துவ நூல்களையும், ஆங்கிலத்தையும் நன்கு கற்ருர்.

தமிழ் நூல்களையும், ஷேக்ஸ்பியர், டெனிசன், ஷெல்லி முதலிய மேல்நாட்டு அறிஞர் எழுதிய ஆங்கில நூல்களையும் கற்ருர். 1892 ஆம் ஆண்டு பி. ஏ. தேர்வில் தமிழிலும், தத்துவக்கலையிலும் முதல்வராக வெற்றி பெற்ருர். பி. ஏ. வகுப்பில் தமிழில் முதன்மையாக வெற்றி பெறும் மாணவர் கட்குப் பாஸ்கரசேதுபதி நல்கும் பொற்பதக்கத் தைப் பரிதி பெற்ருர்.

அக்காலத்தில் சென்னையில் வாழ்ந்த யாழ்ப் பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை என்னும் தமிழ் அறிஞர் தமிழ் ஆர்வமும் பற்றும் மிக்க மாணவர்க்குப் பரிசு தருவது வழக்கம். இவர் வழக்கம்போலப் 'பரிதி'யை அழைத்துத் தூய தமிழ் நடையும், கலையார்வமும் நிறைந்த அவரிடம் ஒரு மணி அளவில் எழுதித்தருமாறு ஒரு வினுத் தாளைக் கொடுத்தார். பரிதி அதனை அரை மணியில் எழுதித்தந்தார்; நாளை வருமாறு பிள்ளை அவர்கள் கூறினுர். மறுநாள் 'பரிதி' சென்றபோது தமிழ் அறிஞர் தாமோதரனுர் அன்புடன் வரவேற்று மனம் கலந்து பேசி, திராவிட மொழியில் ஆர் வத்துடன் விளங்கும் உம்மை 'திராவிட சாஸ்திரி என்று அழைத்தல் பெருமகிழ்ச்சி தருகிறது என்று கூறிப்பாராட்டிப் புகழ்ந்தார்.

தமிழ் ஆசிரியர்

டாக்டர் மில்லர் பரிதிமாற் கலைஞரின் தேர்ச்சி யைப் புகழ்ந்து கிறித்துவக் கல்லூரியிலேயே தத்துவ நூலாசிரியராக அமர்த்த விரும்பினுர். ஆனல் கலைஞர் தமிழ் ஆசிரியர்ப் பணியே

வேண்டும் என்றார். இவரது தமிழ்ப் பற்றையும் ஆர்வத்தையும் கண்டு வியப்படைந்த மில்லர்துரை இவரைத் துணைத் தமிழாசிரியராக அமர்த்தித் தத்துவ ஆசிரியரின் ஊதியத்தையே அளித்தார். இவர் தமிழாசிரியராக அமர்ந்து பணியாற்றுவது சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களுக்குப் பெரு மகிழ்ச்சி தந்தது. ஒருநாள் இவரை நேரில் அழைத்து உயர் தனிச் செம்மொழியான தமிழில் உரை நடை நூல் ஒன்று எழுதவேண்டும் என்று கூறினார். அ வ ர் எண்ணத்தை 'மதிவாணன்' என்னும் நாவலை இயற்றி நிறைவேற்றினார்.

இவர் ஆசிரியப்பணி ஏற்ற பிறகு மூ. சி. பூரண லிங்கம் பிள்ளை அவர்களோடு நண்பர் ஆனார். பிள்ளையவர்கள் நூல் நிலையங்களுக்குச் சென்று தமிழ் வரலாற்றுக்குரிய சான்றுகளைச் சேர்த்துத் தொகுத்துக்கொண்டிருந்தார். சில செய்திகளைத் தொகுக்க கிறித்துவக் கல்லூரி நூல் நிலையத்திற்கு வந்தபோது இருவரும் ந ட் பு டை ய வ ரா கி நெருங்கிப் பேசினர்.

இவர் தமிழ் கற்பிப்பதில் தனித்திறமை பெற்ற வர்; மாணவர்கட்கு ஊக்கமும், விருப்பமும் மேன் மேல் எழுமாறு கற்பிக்கும் ஆற்றல் உடையவர்; தேன் மழை பெய்வது போன்று இவரது சொற் பொழிவு மிக இனிமையாக இருக்கும். இவருடைய சொற்கள் மாணவர் மனத்திலே பசுமரத்தாணி போல நன்கு பதியும். செய்யுட்களுக்குப் பொருள் கூறும்போது நயவுரையும் கூறுவதுண்டு.

'பரிதி' தமிழ் கற்பிக்கும்போது அவர் வகுப்பிலே வினவ எவரும் துணிவதில்லை. ஒரு மாணவன்

வகுப்பிலே கேட்கத்தகாத கேள்வியொன்றைக் கேட்டான். உடனே அதற்குரிய விடை வகுப்பில் கூறத்தகாததொன்று. ஆகையால் 'யாம் மற்றொரு நாள் நீ விரும்பிய விடையை விளக்குமாற்றால் விளக்குதும்' என்று கூறினாராம். ஏனைய மாணவர் வியந்து நகைக்க, அவன் வெட்கி அசைவற்று நின்று, பின் அமர்ந்தான். மற்றொரு மாணவன் பாடம் சொல்லும்போது கவனிக்காது வெளியில் கருத்தைச் செலுத்தினான். அந்த அறிவிலியைப் பார்த்த ஆசிரியர் 'பாடங் கேட்கும் கருத்தில்லாத நீ இவணிருந்து எழுவாய். நீ ஈண்டிருத்தலால் உனக்கும் பிறர்க்கும் பயனில்லை, இவண் இருந்து உன்னால் செயப்படுபொருள் இல்லை' என்று கூறினாராம்.

நூலாசிரியர்

பரிதிமாற் கலைஞர் சிறந்த நூல்கள் எழுதி நூலாசிரியராகவும் புகழ் பெற்றார். ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் என்னும் மூன்று நாடக நூல்களை இயற்றினார். முதல் இரண்டும் உரை நடையில் எழுதியன. மானவிஜயம் என்பது சேர மான்கணைக்கால் இரும்பொறையின் மானச் சிறப்பை விளக்கும் செய்யுளால் எழுதப்பட்ட நாடகம். 'தனிப்பாசுரத்தொகை' என்னும் நூல் ஆங்கிலத்தில் உள்ள 'சானெட்' என்னும் ஒரு வகைக் கவியைப் பின்பற்றியவை. 'மதிவாணன்' என்ற செந்தமிழ்ப் புனைவு நூலே தாமோதரம் பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி எழுதப் பட்ட நூலாகும். தமிழ்மொழியின் வரலாறு, மணியசிவனார் சரித்திரம், நாடகவியல் என்ற ஓர்

இலக்கண நூல், பாவலர்விருந்து என்ற பல கால் இயற்றிய செய்யுட்களின் தொகுப்பு நூல், சூர்ப் பணகை, மூத்ராராட்சசம், உமை திருமணம், 'இன்னுமா?' என்னும் தமிழ்க்கதை, அவ்வைக் காட்சி என்னும் செய்யுள் நூல் ஆகிய நூல்கள் முதலியன இவர் இயற்றியவையே.

சிறந்த பதிப்பாசிரியராக விளங்கிய இவர், 'நாமகள் சிலம்பு' என்னும் வரிசையில் நாடக நூல்களைப் பதிப்பித்தார். 'தமிழ் மகள் மேகலை' என்னும் வரிசையில் செய்யுள் நூல்களைப் பதிப் பித்தார். 'இன்பவல்லி' என்ற வரிசையில் கதைக ளாக உள்ள உரை நடைகளைப் பதிப்பித்தார். ஞானதரங்கிணி என்னும் வரிசையில் ஞான நூல் களையும், கலாநிதி என்னும் வரிசையில் இவற்றில் அடங்காதவற்றையும், கலைமயில் கலாபம் என்னும் வரிசையில் பண்டை ஆசிரியர் நூல்களையும் பதிப் பித்தார், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா மழவை மகாலிங்கையர் இலக்கணம், தாண்டவராய முதலி யார் பஞ்சதந்திரம் என்ற பண்டையாசிரியர் நூல் களையும் பதிப்பித்துள்ளார்.

தமிழ்த்தொண்டு

இவர் செய்த தமிழ்த்தொண்டில் முதன்மை யானது நாடகத்தமிழைப் புதுமையான முறையில் உயிர்ப்பித்ததாகும். இவர் நாடகங்களில் நடித்தும் நாடகத் தமிழை முன்னேற்றினர்; பாண்டித் துரைத் தேவர் நடத்திய 'செந்தமிழ்' என்னும் மாத வெளி யீட்டிற்குக் கட்டுரைகள் பல எழுதியும், தமிழ்த் தேர்வுகளுக்குத் தேர்வாளர்களில் ஒருவராக இருந்

தும் தமிழ்த்தொண்டு ஆற்றினர்; 'லார்டு கர்ஸான்' இந்திய அரசப் பிரதிநிதியாக இருந்த காலத்தில் தமிழைப் பல்கலைக் கழகத்தில் கட்டாய பாடமாக்கப் பெரிதும் முயன்று வெற்றி பெற்றார்; கல்லூரியில் தமிழ்க் கற்பித்ததோடு வீட்டிலும் தனியே தமிழ்க் கற்பித்தார்.

குணச்சிறப்புகள்

'பரிதி' அளவில்லாத தமிழ்ப் பற்றினல் தமிழ் உயர்தனிச் செம்மொழியே (Classical Language) என்ற கருத்தை நிலைநாட்டினர். தன்னலங் கருதாமை, அஞ்சாமை, கடமை தவறாமை, முதலிய மேலான பண்புகள் நிறைந்தவர். இவர் ஆராய்ந்து முடிவு செய்யும் ஆற்றலும், பிறர்க்குதவும் பெருந்தன்மையும் நிறைந்து வாழ்க்கை நடத்தினர்.

பரிதிமாற் கலைஞன் பத்தொன்பதாம் வயதிலே திருமணம் செய்துகொண்டு பதினன்கு ஆண்டுகள் இல்லறம் நடத்தினர். பழனியில் அரசாங்க ஊழியராய் இருந்த கலியாணசுந்தரம் ஐயரின் மகளான முத்துசுபலட்சுமியம்மாளை மணந்து சிறப்புடன் வாழ்ந்தார். இல்லறத்தை நல்லறமாக நடத்திய இவர்க்கு ஆனந்தவல்லி என்னும் பெண்ணும், நடராசன், சுவாமிநாதன் என்னும் பிள்ளைகளும் பிறந்தனர்.

இரவில் நீண்ட நேரம் தூங்காது நூல்களைப் படிக்கும் வழக்கத்தினலும் எல்லை மீறிய உழைப்பினலும் உடல்மெலிந்தது. 1903 ஆம் ஆண்டு சூன் முதல் ஆறு மாதம் ஒய்வு எடுத்துக்கொண்டு கல்லூரியிலிருந்து விலகினர். அதே ஆண்டில்

நவம்பர் இரண்டாம் நாள் திங்கள்கிழமை பருவுடலை நீத்துப் புகழுடலை அடைந்தார். தமிழ் நாடெங்கும் தமிழ்ப்பற்றை உண்டாக்கித் தொண்டு செய்த இவர் புகழ் என்றும் நின்று நிலவுவதாக.

10. இராபர்ட் கால்டுவெல்

[கி.பி. 1814—1891]

இராபர்ட் கால்டுவெல் அயர்லாந்து நாட்டில் கிளாடி என்னும் ஆற்றின் கரையிலுள்ள சிற்றூர் ஒன்றில் 1814 ஆம் ஆண்டில் பிறந்தார். பத்து வயதுவரை அவ்வூரிலேயே வளர்ந்தவர். பிறகு ஸ்காட்லாந்து நாட்டில் கிளாஸ்கோ நகரில் பெற்றோர் சென்று குடியேறியதால் அங்கு வாழ்ந்தார். அவ்விடத்திலேயே தம் பதினாறும் ஆண்டு வரை ஆங்கில இலக்கிய இலக்கணங்களைக் குற்ற மறக் கற்று அறிவு வன்மை பெற்றார். பிறகு தன் தந்தையின் விருப்பப்படி டப்ளின் நகரத்திலிருந்த அழகுக் கலைக் கல்லூரியில் ஓவியம் கற்றார். அக் கலையில் தேர்ச்சி அடைந்து உயர்ந்த பரிசும் பெற்றார். அத்துறையில் கருத்து ஈடுபடவில்லை. கடவுளின் ஆற்றல், சிறப்பு இவைகளை அறிவிக்கும் ஞான நூல்களிலேயே இவர் மனம் சென்றது. ஆதலால் லண்டன் சமயத் தொண்டர் சங்கச் சார்பிலே, அதன் கிளைக் கழகமான கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து ஐரோப்பியத் தொன் மொழிகளிலுள்ள மதத் தொடர்பான நூல்களையும், நீதி நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றார். அப் பல்கலைக் கழகத்தில் மொழி நூல்முறை வழுவாது

கிரீக்கு மொழியின் சிறப்பைப் பிற உயர் தனிச் செம் மொழிகளுடன் ஒப்புமைப்படுத்திக் கற்பித்துவந் தார். டேனியல் செண்ட் போர்ட் என்பவரிடம் பாடங்கேட்டதால் இவர் பின்பு தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதத் தூண்டு கோலாயிற்று.

இந்நிலையில் தமிழ் நாட்டில் கிறித்தவ மதப் பணி செய்ய ஆர்வமுடைய பேரறிஞரை இலண் டன் சமயத் தொண்டர் கழகத்தினர் நாடி இவரைத் தேர்ந்து எடுத்தனர். கால்டுவெல் அத்தொண்டை ஆர்வம் பொங்க ஏற்று மகிழ்ச்சியோடு கப்பலில் நான்கு தினங்களில் இந்தியாவை அடைந்தார்; **1838** ஆம் ஆண்டில் சென்னையை அடைந்தார். அவ்வூரில் தமிழ்ப் புலமையோடு சிறப்புடன் திகழ்ந்த துரு (Rev. Drew) என்னும் ஆங்கிலேய அறிஞருடன் இவர் மூ ன் று ண் டு க ள் கி.பி. **1841** ஆம் ஆண்டுவரையில் வாழ்ந்து முறையாகத் தமிழ் கற்றார். அப்போது சென்னையில் புகழுடன் வாழ்ந்த ஐரோப்பியத் தமிழ் அறிஞரான போப், ஆண்டர்சன், பவர், என்போரின் நட்பை அடைந் தார். **1841** ஆம் ஆண்டில் இவர் மதத்துறையில் உயர்வுற்றுத் தேர்ச்சி பெற்று 'குரு' என்னும் பட்டம் பெற்றார்.

இவ்வாறு சென்னையில் மூன்றாண்டுகள் வசித்த கால்டுவெல் பாண்டிய நாட்டில் மதப்பணி செய்யப் புறப்பட்டு நானூறு மைல் தொலைவையும் நடந்தே சுற்றிப்பார்த்துச் செல்வது என முடிவு செய்தார். அதனால் இடையிலே வாழும் நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும், பேசும் மொழியையும்

நேரில் அறிந்து பயன்பெற முடியும் என்று எண்ணினார்; தம் நண்பரிடம் விடைபெற்றுப் புறப் பட்டார்.

இவர் நடந்து சென்றபோது, வழியில் இயற்கை அழகைக் கண்டு இன்புற்றுச் சோலைகளில் தங்கி இளைப்பாறிச் சோழ நாட்டை அடைந்து காவிரி யாற்றைக் கண்டு மகிழ்ந்தார்; மாயூரம் வழியே சென்று கடற்கரையிலுள்ள தரங்கம்பாடியில் தங் கினார்; பிறகு கும்பகோணத்தின் வழியாகத் தஞ்சையை அடைந்து சோழன் கட்டிய ராச ராசேச்வரத்தையும், சோழ அரசர்கள் எடுத்த கோட்டையையும் கண்டு வியப்பில் மூழ்கினார்; அப்போது தஞ்சையிலிருந்த கிறித்தவ மதத்தின ரான வேதநாயகம் பிள்ளையவர்களைக் கண்டு பழகி, அவர் இயற்றிய இனிய தமிழிசைப் பாடல்களைப் படித்து இன்புற்றார்; பிறகு பொன்னியின் கரையி லமைந்த திருச்சிராப்பள்ளி மலையின் அழகையும் திருவரங்கத்தின் சிறப்பையும் கண்டு நீலகிரியை அடைந்தார்; அங்கிருந்த ஸ்பென்சர் என்னும் அத்தியட்ச குருவின் பராமரிப்பில் ஒரு திங்கள் தங்கினார்.

ஒரு மாதம் ஓய்வெடுத்த பிறகு மதுரையை நோக்கிச் சென்றார். வழியில் பலவகையான துன் பங்களுக்கு ஆளானார். ஒருநாள் ஒரு சிறு சிற்றூரில் இவர் இருக்க நேர்ந்தது; மழையால் கால்டுவெல் முழுவதும் நனைந்தார். சிற்றூர் மக்கள் தங்க இடம் தர மறுத்தனர்; மாட்டுத் தொழுவத்தைக் காட்டிப் படுத்துறங்கச் சொன்னார்கள். இத்தகைய துன்பங் களை யெல்லாம் பொறுத்து மதுரையை அடைந்

தார். பாண்டிய நாட்டுத் தலைநகரமான மதுரையின் மேன்மை, மீனாட்சி கோயில், திருமலை நாய்க்கர் மகால் ஆகியவற்றைக் கண்டு, அங்கிருந்து நீங்கித் திருமங்கலம் சென்று திரேசி ஐயர் (Dr. Tracy) என்ற அமெரிக்க நாட்டு மதத் தொண்டருடன் பழகினார்; பின் திருநெல்வேலியை அடைந்தார். அங்குள்ள சோலைகளின் அழகைக் கண்டு மகிழ்ந்த இவர் பாளையங்கோட்டையை நெருங்க அங்கிருந்த கிறித்தவர் நல்வரவு கூறி வரவேற்றனர்; 1841 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாளில் 'கங்குல் கழிந்தது கதிரொளி எழுந்தது,' என்ற பொருளைப் பற்றி ஒரு சொற்பொழிவு செய்தார். பிறகு திருநெல்வேலியில் இடையன்குடி என்னும் ஊரிலே ஐம்பதாண்டுகள் வசித்துச் சிறப்பாக மதத்தொண்டு செய்தார்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதைத் தம் வாழ்க்கையின் கொள்கையாகக் கொண்ட கால்டுவெல் இடையன்குடி என்னும் சிற்றூரைத் திருத்திப் பலவிடங்களில் கிணறுகள் வெட்டினார்; தொடக்கப் பள்ளிகள் பல தொடங்கி ஆண், பெண் என்ற இருபாலரும் கல்வி கற்க ஏற்பாடு செய்தார். 1843 ஆம் ஆண்டில் நாஞ்சில் நாட்டு நாகர்க்கோயிலில் கிறித்தவத் தொண்டராக இருந்த மால்த் என்பவரின் மகளான எலிசா என்பவரை இவர் மணந்தார். இவருக்கு மக்கள் மூவர் பிறந்து நாட்டிற்குத் தொண்டு செய்தனர்.

கிறித்தவர்களின் வேதநூல் விவிலியம் (Bible). அதனை மொழி பெயர்த்த பன்னிருவரில் ஒருவராக இருந்து கால்டுவெல் தலையான தொண்டு

செய்தார். இவர் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளைக் கற்றறிந்து திராவிட மொழிகள் ஓரினத்தைச் சேர்ந்தவை என்பதை முதல் முதலாக விளக்கினர். இவர் ஆங்கிலத்தில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், திருநெல்வேலிச் சரித்திரம் என்னும் நூல்களை எழுதினர். ஒப்பிலக் கணம் இயற்றிய கால்டுவெல் அவர்களுக்குக் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தவர் 'டாக்டர்' என் னும் பட்டம் கொடுத்தனர்; நற்கருணைத் தியான மாலை, தாமரைத் தடாகம் முதலிய தமிழ் நூல் களும், 'ஞானஸ்நானம்', 'நற்கருணை' என்னும் கட்டுரைகளும் எழுதினர்.

கால்டுவெல் ஐயர் இடையன்குடியை இருப் பிடமாகக் கொண்டு செய்த மதத்தொண்டு உயர்ந் தது. கணக்கற்ற குடும்பங்கள் இப்புதிய மதத்தில் புகுந்தன. இவர் கூறிய நல்ல வழிகள் மக்களின் மனதைக் கொள்ளை கொண்டமையால் அவர்கள் மனம்மாறி ஏசு பெருமானை அடைக்கலம் புகுந் தனர். இவரது சமயப் பணியைப் புகழ்ந்து சென்னை மாநில அத்தியட்ச குரு 1877 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் 'பிஷப்' ஆகப் பட்டம் கொடுத்து அத்தியட்ச குருவாக்கினர்.

இவ்வாறு நேர்மையாக வாழ்ந்து அறம் பல செய்து அருந் தொண்டுகளைச் செய்த ஐயர் அவர் கள் வயது முதிர்ச்சி உற்றதால் 1891 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாள் தள்ளாமையின் காரணமாக ஓய்வு பெற்றுக் கோடைக்கானல் மலையில் வசித்தார். அதே ஆண்டில் ஆகஸ்டு 28 ஆம் நாள் கால மானர். இவரை இடையன்குடி என்ற சிற்றூரிலே

இவர் கட்டிய கோயிலிலேயே கொணர்ந்து அடக்கம் செய்தனர்.

ஏழை மக்களுக்கு எழுத்தறிவித்து, மதத்தை வளர்த்துச் திருச்சபைகள் பல நிறுவித் திராவிட மொழிகளுக்குப் புத்துயிர் அளித்த கால்டுவெல் ஐயர் அவர்களின் சிறப்பு அளவிட்டுச் சொல்லால் கூற இயலுமோ? அவர் புகழ் என்றும் நின்று நிலவுக.

11. வ. உ. சிதம்பரம் பிள்ளை

'கப்பலோட்டிய தமிழன்' என்ற தொடர் வ. உ சிதம்பரம் பிள்ளையைக் குறிக்கும் என்று அறியாத தமிழ் நாட்டு மக்கள் தற்காலத்தில் இல்லை என்று உறுதியாகக் கூறலாம். தமிழகத் தந்தை, தமிழ்ப்பணி செய்த சான்றோர் என்றெல்லாம் இவரைப்பற்றிக் கூறுவதை யாவரும் அறிவர். ஆதலால், இவர் வரலாற்றை அறிந்து கொள்ளவேண்டுவது மிக இன்றியமையாததாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பாஞ்சாலங் குறிச்சி என்ற சிறந்த ஊருக்கு அருகிலே அளகா புரி என்று அழைக்கப்படும் ஒட்டப்பிடாரத்தில் உலகநாதப் பிள்ளை என்னும் அறிஞருக்கு 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் அன்று பிறந்தார். தாயார் பரமாயி அம்மையார்.

இளமையில் தொடக்கக் கல்வியைத் தான் பிறந்த ஊரிலும், பின்பு தூத்துக்குடியிலுள்ள சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்று 'மெட்ரிக்

குலேஷன்' தேறினர். பின்பு சில நாட்கள் ஒட்டப்பிடாரம் தாலுக்காவில் குமாஸ்தாவாக வேலை செய்தார். பிறகு திருச்சிராப்பள்ளி சென்று சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்து, 23 ஆம் வயதில் வழக்கறிஞர் தேர்வில் சிறப்பாகத் தேறினர். தேறித் திரும்பிவந்து தனது ஊரிலே இருந்த நீதிமன்றத்தில் வக்கீல் தொழில் புரிந்தார். ஏழைகளிடத்தில் பொருளை எதிர்பாராது வாதிடுவார். தொடக்கத்திலிருந்தே பொய் வழக்குகளில் ஈடுபடாமல், எவ் வழக்கையும் உண்மை என அறிந்த பிறகே ஏற்று வழக்காடலானர். இச்செயல் அவர் புகழ் எங்கும் பரவ முதற் காரணமாய் இருந்தது. இவ்வாறு தொழில் புரியும்போது திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளை மகள் வள்ளியம்மையைத் தம் மனைவியாக ஏற்று இல்லறத்தை இனிது நடத்தினர்.

தொழில் செய்த நேரங்கள் தவிர ஓய்வு நேரங்களில் திருக்குறள், தொல்காப்பியம், சங்கநூல்கள் முதலிய தமிழ் நூல்களைத் தெளிவாகக் கற்றார். திருக்குறளே வாழ்க்கைக்கு வழிகாட்டி எனக் கொண்டு குறட்பாக்கள் காட்டிய வழியிலேயே வாழ்க்கையை நடத்தினர். தமிழ் மொழி அறிவு பெற்றமையால் நாட்டின் பண்டைய மேன்மையையும், இன்றைய சிறுமையையும் அறிந்தார். ஆதலால் நாட்டுப்பற்று மனதில் தோன்றியது.

1905 ஆம் ஆண்டில் இந்நாட்டின் ஒரு பகுதியான வங்காளத்தில், லார்டு கர்சன் என்னும் ஆங்கில கவர்னரால் இந்து முஸ்லீம் பிரிவு ஏற்பட்டது. இதனையே வங்காளப் பிரிவினை என்பர். அப்பிரிவினை செய்யப்பட்டதற்காக நாடு முழுவ

தும் விடுதலை வேட்கையும் போராட்டமும் கிளர்ச்சி யுற்று எழுந்தன. வங்காளத்தில் விபினசந்திர பாலரும், பாஞ்சாலத்தில் லஜபதிராயும், மகா ராஷ்டிரத்தில் பாலகங்காதர திலகரும், தென்னாட்டில் சிதம்பரனாரும் விடுதலைப்போருக்குத் தலைவர்களாகத் திகழ்ந்தனர். வெளிநாட்டுப் பொருள்களை விலக்குதலும், நாட்டுப் பொருள்களை ஆதரித்தலும் ஆகிய மனப்பான்மை மக்களிடம் வளர்ந்தோங்கின. தூத்துக்குடியில் தரும சங்க நெசவுச் சாலையும், சுதேசிப் பண்டக சாலையும் இவர் தோற்றுவித்தார். பிறகு தமது வழக்கறிஞர் தொழிலைவிட்டு நாட்டுத் தொண்டில் இறங்கினார்.

தூத்துக்குடி ஒரு துறைமுகப் பட்டினம். பெரிய வாணிகத்தலம். கடலில் தலைமை பூண்ட ஆங்கிலேயர், இந்திய வணிகர்களை மதிப்பற்ற முறையில் நடத்தியமையை நேரில் பார்த்த இவர் மனம் வருந்தியது. ஆதலால் சிதம்பரனார் எவ்வாறாயினும் முயன்று கப்பல் வணிகம் செய்வதென்று உறுதிபூண்டார்; பொருள் திரட்டத் தொடங்கினார். முதன் முதல் பாலைவனந்தம் ஜமீன்தார் உயர் திரு பாண்டித்துரைத் தேவரவர்கள் ஒரு இலட்சம் வெண் பொற்காசுகள் அளித்தார். முகம்மதிய நண்பர் ஜனாப் ஹாஜி முகம்மது என்பவரும் பெருந்தொகை அளித்தார். வேறு பலரும் பொருள் உதவி செய்தனர். இருப்பினும் கப்பல் கட்ட அப்பொருள் போதியதாக இல்லை. வட நாட்டுக்குச் சென்று பணம் திரட்டினார். பங்குக்கு 10 வெண் பொற்காசுகள் வீதம் 10 இலட்சம் ரூபாய் பொருள் சேர்த்து 1906 ஆம் ஆண்டில்

'சுதேசிக் கப்பல் கம்பெனி'யைப் பதிவு செய்தார். தமிழ் நாட்டுக் கப்பல்கள் ஆங்கிலக் கப்பல்களுடன் போட்டியிட்டன. தமிழர் வணிகம் ஓங்கியது.

சிதம்பரனாரது இடைவிடா முயற்சியையும், வெற்றியையும் கண்ட ஆங்கிலேயர் போட்டிக்காகக் கட்டணங்களைக் குறைத்துச் சுதேசிக் கப்பல் கம்பெனியை நசுக்க முயன்றனர். தூத்துக்குடியில் ஆங்கிலேயர் வைத்து நடத்தும் பஞ்சாலை, தொழிலாளரின் ஊதியத்தைக் குறைத்தது. ஆதலால் தொழிலாளரின் உரிமைப் போராட்டத்திற்குத் தலைவர் ஆனார். தொழிலாளரின் உரிமைப் போர் வெற்றியாகவே முடிந்தது.

வெள்ளையர் இவரை அடக்க அரசியலாரின் உதவியை எதிர்ப்பார்த்தனர். இவர்மீது அதிகாரிகள் முதலில் தொடர்ந்த ஜாமீன் வழக்குத் தோல்வியடைந்தது. விபினசந்திரபாலரின் விடுதலை நாளன்று திருநெல்வேலியில் தாம்பிரவருணிக் கரையில் பெருங்கூட்டத்தில் சிதம்பரனார் விடுதலை முழக்கம் செய்தார். உடனே கைதியாக்கப்பட்டு நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்டார். பல இடங்களில் அரசுக்கு எதிராகப் பேசி மக்களைக் கலகம் செய்யத் தூண்டினார் என்றும், பிற தலைவர்களைப் பேசுமாறு செய்தார் என்றும் இரு குற்றங்கள் சுமத்தப்பட்டு பின்ஹே துரை (A. F. Pinhey) அவர்களால் இவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டது.

வ. உ. சி. சிறையில் உண்டான துன்பங்களைப் பொறுத்தார். நாள்தோறும் செக்கிழுத்தார்; கல்

லுடைக்கும் தொழிலையும் செய்தார்; இரவு நேரங்களில் தமிழ் மொழி ஆராய்ச்சியை மேற்கொண்டு தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றும் முயற்சியில் ஈடுபட்டார். கோவைச் சிறையில் இருக்கும்போது ஒரு வெள்ளையன் மரபைச்சேர்ந்த சிறை அதிகாரி இவரைக் கொடுமையாக நடத்தினர். அதைக் கண்டு கைதிகள் கலகம் விளைவித்தனர். இதன் பயனாகச் சிறைச் சீர்திருத்தக் குழு ஒன்று நிறுவப் பட்டு கைதிகளின் துன்பங்கள் குறைந்தன. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இங்கிலாந்தில் ஆட்சிப் பீடம் ஏறியதை முன்னிட்டு, 1911 ஆம் ஆண்டு டிசம்பரில் வ. உ. சிதம்பரம் பிள்ளை விடுதலை அடைந்தார்.

விடுதலை பெற்ற இவர் சென்னையில் சில ஆண்டுகள் வாழ்ந்து நெய், அரிசி வாணிகம் செய்து வாழ்க்கை நடத்தினர். இவர் வறுமையால் துன்புறுவது அறிந்த உயர்நீதிமன்ற நீதிபதி வாலஸ் என்பவர் வழக்கறிஞர் தொழிலை மீண்டும் நடத்துவதற்குரிய விருதை இவருக்கு வாங்கித்தந்தார். இந்த நன்றியை மறவாமல் தன் குமாரர்களில் ஒருவருக்கு 'வாலேஸ்வரன்' என்று பெயர் வைத்து அழைத்தார். தீண்டாமை ஒழிப்பில் பேரார்வம் கொண்ட இவர் தம் வீட்டிலேயே ஹரிஜன சாமியார் ஒருவரை வைத்து ஆதரித்தார். விதவை மணம் சிலவற்றையும், கலப்பு மணம் சிலவற்றையும் நடத்திச் சமூகச் சீர்திருத்தத்தில் இவருக்கு இருந்த விருப்பத்தை உலகறியச் செய்தார்.

இவர் 'மனம்போல வாழ்வு' அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம் முதலிய

மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளார். மெய்யறிவு பாடற்றிரட்டு, மெய்யறம், சுய சரிதை முதலிய செய்யுள் நூல்கள் இவரால் அறிஞர் உலகிற்கு வழங்கப்பட்டன. திருக்குறள், இன்னிலை என்ற இரண்டு பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுக்கு இவர் உரை எழுதியுள்ளார்; தொல்காப்பியம் இளம்பூரணர் உரை, திருக்குறள் மணக்குடவர் உரை என்ற இருநூல்களையும் ஏடு பெயர்த்து எழுதிப் பதிப்பித்தார். இவர் 'விவேகபாநு', 'இந்து நேசன்' என்ற செய்தித்தாள்களின் ஆசிரியராகவும் இருந்து தொண்டாற்றினர்.

வ. உ. சிதம்பரனர் 1936 ஆம் ஆண்டில் நோயால் வருந்தி, அவ்வாண்டு நவம்பர் 18 ஆம் நாள் விண்ணுலகு சென்ருர். வீரம், வெற்றி இவைகளின் இருப்பிடமாய் விளங்கிய தமிழகத் தந்தையான கப்பலோட்டிய தமிழரின் புகழ் என்றும் உயர்வுடன் நிலைபெறுவதாக.

12. அலெக்சாந்திரியாவும் கலங்கரை விளக்கும்

கலங்கரை விளக்கு கடலில் வந்துகொண்டிருக்கும் கப்பல்களுக்குக் கடற்கரை உள்ள இடத்தையும், துறைமுகம் உள்ள இடத்தையும் தெரிவிக்கப் பயன்படும். அது கப்பல்கள் மோதினல் தூளாக நொறுங்கிவிடக்கூடிய கடற்பாறைகளின் இருப்பிடத்தைக் கப்பலோட்டுபவர்க்கு எடுத்துக்காட்டும் அபாய அறிவிப்பாகப்பயன்பட்டு வருகிறது.

புயலால் வழிதவறிச் சென்ற கப்பலிலுள்ள மாலுமி களுக்குக் கடற்கரையைப் புலப்படுத்தும் வழி காட்டி யாகவும் இது பண்டைக் காலத்திலிருந்தே பயன் பட்டுவருகிறது. பகுத்தறிவிற் சிறந்த மக்கட் சமூகத்தினர் எப்போது கடலில் கப்பலோட்டி னரோ, அன்று முதல் கலங்கரை விளக்கையும் ஏதோ ஒருவகையில் அமைத்துப்பயன்படுத்தியுள் ளனர். எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாவுக்கு அருகில் கி. மு. 300 ஆம் ஆண்டில் அமைத்த கலங்கரை விளக்கு உலகில் பழைய எழு வியப்புக் களுள் ஒன்று. அது அமைக்கப்பட்ட வரலாற் றைக் காண்போம்.

அலெக்சாந்திரியா எகிப்து நாட்டின் முக்கியத் துறைமுகம். மத்திய தரைக்கடலின் கரையில் அமைந்துள்ளது. அலெக்சாந்தர், எகிப்து நாட்டைவென்ற பிறகு, நைல் நதியில் பெரிய படகில் சென்றார். நைல்நதி மத்திய தரைக் கடலில் வந்து சேரும் இடத்தில், மண் குடிசைகள் சிலவற்றை அவ்வரசர் கண்டார்; அந்த இடமே சிறந்த துறைமுகம் ஆக்குதற்குரிய உயர்வான இடம் என்று உறுதி செய்தார்; பின்னர் சிறந்த கட்டிட வல்லுநர்களை வரவழைத்து சிறந்த நகரம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்தார். அந்த நகரமே அவ்வரசருக்குப் பிறகு ‘அலெக்சாந்திரியா’ என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

அலெக்சாந்தர் அந்நகரம் கட்டத்தொடங்கும் முன்னரே இறந்தார். அவர் இறந்த பின் போடோலெமி (Ptolemy) என்ற படைத் தலைவர் எகிப்து நாட்டின் அரசர் பதவியை ஏற்றார்.

சில ஆண்டுகளில் அலெக்சாந்திரியா சிறந்த நகரமாகப் போற்றிப் புகழப்பட்டது. கப்பல்கள் பல அத்துறைமுகத்தை அடைந்து சென்றன. ஆனல் அலெக்சாந்திரிய வளைகுடா, பாறைகள் நிறைந்திருந்ததால் மாலுமிகள் இருளில் கப்பல்களை நிறுத்தத் துன்பப்பட்டனர். பல கப்பல்கள் இருளில் பாறைகளில் மோதித் தூள் தூளாயின. பல மக்கள் உயிர்கள் சேதமாயின. கடைசியாக அலெக்சாந்திரிய மக்களில் ஒருவன் 'இக்கடற்கரையில் ஒரு பெரிய சிகரம் ஒன்று கட்டி அதில் விளக்கு ஒன்றினை, அதன் ஒளி பல மைல்கள் சேய்மையில் தெரியு மாறு வைக்கவேண்டும். அந்த ஒளி கப்பல்களைச் சேதமின்றிக் கரையை அடையுமாறு செய்யும்' என்று கூறினன். அலெக்சாந்திரிய மக்கள் அந்த எண்ணத்தை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்று, அரசன் போடோலெமி (Ptolemy) யிடம் செய்தியை அறிவித்தனர். உடனே அரசன் 'அங்குச் சிகரம் உடனே கட்டப்படவேண்டும். அது வலிமையுள்ளதாகக் காற்றினலும், புயலினு லும் சேதம் உண்டாகாதவாறு கட்டவேண்டும். அது துறைமுகத்தில் அமைக்கப்பட்ட மிக அழகான சிகரமாக உலகத்தாரால் கொண்டாடப் படவேண்டும்' என்று ஆணையிட்டான். பேரோஸ் (Pharos) தீவு அச்சிகரம் கட்டச் சிறந்த இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

புகழ்மிக்க கிரேக்கக் கலை வல்லுநன் அச் சிகரத்தை அமைக்க இசைந்தான். 600 அடிகள் உயரத்திற்கு அச்சிகரத்தை அமைத்தான். அச் சிகரத்தில் எட்டு மாடிகள் இருந்தன. ஒவ்வொரு

மாடியையும் சுற்றி இடமகன்ற சுற்றுப்புறங்கள் சிறந்த முறையில் அழகு செய்யப்பட்டுக் காட்சி யளித்தன. அதில் மூன்னூறு பெரிய அறை களுக்குமேல் அமைக்கப்பட்டிருந்தன. கடலை நோக்கி இருக்கும் அறைகளின் சுவர்களில் சதுர வடிவமான சன்னல்கள் பல காட்சி அளித்தன. அந்தச் சன்னல்களில் இரவு நேரங்களில் விளக்கு கள் எரிந்துகொண்டே இருக்கும். அந்த உயர மான சிகரத்தில் சிறந்த கண்ணுடி பதிக்கப்பட் டிருந்தது. அது சேய்மையில் வருகின்ற கப்பல் களைத் தன் ஒளியினுல் காணச் செய்தது. அந்தச் சிகரத்தின் உயரம் ஏறக்குறைய நூறுமைல் தூரத் திற்கு ஒளியைப் பரப்பியதால், மாலுமிகள் தாம் செலுத்தும் கப்பல்களைத் துறைமுகத்திற்குப் பாது காப்பாகக் கொணர உதவியது.

மிக விரைவில் அலெக்சாந்திரிய மக்கள் அக் கலங்கரை விளக்கத்தை, எதிரிகளைத் துரத்தப் பயன்படுத்தத் தொடங்கினர். அவர்கள் பகைவர் களின் மரக்கலங்கள் வரும் இடத்தைச் சூரியனின் கதிர்களைக் கண்ணுடியின் மூலமாக அறிந்து எரித் தனர். அரசன் போடோலெமி (Ptolemy) அச் சிகரத்தில் 'மக்கள் சமூகத்தின் நலனுக்காகக்கட்டப் பட்டது' என்று செதுக்குமாறு செய்தான். இவ் வாறு முதல் கலங்கரை விளக்கம் உலகத்தில் கட்டப்பட்டது. அது 'பாரோஸ் சிகரம்' என்று அத்தீவின் பெயரால் அழைக்கப்பட்டது. கிரேக் கர்கள் பாரோஸ் என்ற பெயரையே கலங்கரை விளக்கம் என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தினர். தற்காலத்தில் பிரெஞ்சு மொழியில் பேர் (Phare)

என்ற சொல்லேயே கலங்கரை விளக்கம் என்பதை விளக்க வழங்குகின்றனர்.

பல நூற்றுண்டுகள் 'பாரோஸ் சிகரம்' அவ் விடத்திலேயே இருந்தது. ஆல் வாலிட் என்பவர் எகிப்தை ஆண்ட காலத்தில், பகையரசன் ஒருவன் அச்சிகரத்தை அழித்தால் அலெக்சாந்திரியாமீது இரவில் படையெடுத்து வெல்லலாம் எனத் திட்ட மிட்டான். அத்திட்டம் நிறைவேற ஒரு சூழ்ச்சி செய்தான். அறிவுடைய ஒற்றன் ஒருவனைக் காலிபின் அரசவைக்கு அனுப்பினுன். அவ் வொற்றன் காலிபை அந்தப் பாரோஸ் சிகரத்தின் கீழ் விலைமதிக்கமுடியாத முத்து, மணி முதலியன இருப்பதாகக்கூறி, முற்றிலும் நம்புமாறு செய்தான். அந்த அறிவிலியான காலிப் அச்சிகரத்தை இடித் துக் கீழேதள்ள ஆணையிட்டான். ஏறக்குறைய பாதிக்கட்டிடம் இடித்துமுடிந்த பிறகு, அச்சிகரத் தின் கீழ்ச் செல்வக்குவியல் மிகுதியாக இருப்ப தாகக் கூறியது வெறும் பொய்க் கதை என்று அறிந்தான். அக்கலங்கரை விளக்கத்தின் ஒரு பகுதி பல ஆண்டுகளுக்குப் பிறகு மசூதியாக மாற்றப்பட்டது. அந்த மசூதியும் பின்பு ஒரு பூகம்பத்தினுல் அழிந்தது. இவ்வாறு பாரோஸ் சிகரம், உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்று, இருந்த இடம் தெரியாது மறைந்தது.

தற்போது இந்தியாவில் 165 கலங்கரை விளக்குகள் உள்ளன. அவைகளுள் சென்னே, பம்பாய், கல்கத்தா போன்ற துறைமுகங்களில் உள்ள கலங்கரை விளக்குகளே குறிப்பிடத் தக்கவை.

பயிற்சி

1. கடமை உணர்ச்சியின் சிறப்பு.
2. அன்பே கடவுள்.
3. தனபாலனும் அன்புடைமையும்.
4. மனநிறைவே செல்வம்.
5. தலை ஈந்த வள்ளல்.
6. குமணனும் பெருந்தலைச் சாத்தனாரும்
7. மாவளத்தானும் தமிழ்ப் பற்றும்.
8. வணிகன் அலியும், உற்ற நண்பனும்.
9. உண்மையே வெல்லும்.
10. சுல்தான், அலிக்கு நீதி வழங்கிய வரலாறு.
11. ஜேம்ஸ் வாட்டின் இளமைக் கல்வியும் ஆராய்ச்சியும்.
12. மங்கோ பார்க் செய்த ஆப்பிரிக்க முதற் செலவு.
13. மங்கோ பார்க்கும் நைஜர் நதியின் சிறப்பும்.
14. பரிதிமாற் கலைஞரின் இளமையும் கல்வியும்.
15. பரிதிமாற் கலைஞரின் ஆசிரியப்பணியும் தமிழ்ப் பற்றும் தொண்டும்.
16. கால்டுவெல் ஐயரின் சமயப்பணி.
17. வ. உ. சிதம்பரம் பிள்ளையும், விடுதலை வேட்கையும்.
18. கலங்கரை விளக்க[illegible] காரணமும் பயனும்.
19. ஏழு வியப்புகளில் ஒன்றான அலெக்சாந்திரியா கலங்கரை விளக்கம்.
20. கலங்கரை விளக்கம் ஏற்பட்ட வரலாறும், அழிந்த முறையும்.

THAMIZH THANTHA THANE

BY M. RAMANATHAN

விலை 70 நயே பைசே.